மாலை: 52 ஜனவரி 2010 விலை ரூ.10

# திருக்கோயில்

இந்து சமய அறநிலையத்துறை வெளியீடு









தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறையின் உயர்நிலை ஆலோசனைக் குழுக் கூட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தலைமையில் 12.12.2009 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின். அவர்கள் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார். மேலும், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.கேஆர். பெரியகருப்பன் அவர்கள், தலைமைச் செயலாளர் திரு.கே.எஸ். ஸ்ரீபதி இ.ஆ.ப அவர்கள் தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு.க.முத்துசாமி இ.ஆ.ப அவர்கள், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் திரு.ப.ரா.சம்பத் இ.ஆ.ப அவர்கள், குன்றக்குடி ஆதீனம் தவத்திரு பொன்னம்பல அடிகளார், பேரூர் ஆதீனம் தவத் திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார், திருப்பனந்தாள் ஆதீனம் தவத்திரு முத்துக்குமாரசுவாமி தம்பிரான், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திருமதி. ஏ.எஸ்.பொன்னம்மாள், திரு.கருமுத்து கண்ணன், திரு.எஸ்.வி.பாலசுப்ரமணியம், தருமபுரம், திருவாவடுதுறை ஆதீனம் மற்றும் ஸ்ரீமத் ஆண்டவன் சுவாமிகள் சார்பாக அவர்களது பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# திருக்கோயில்

திருவள்ளுவர் ஆண்டு: 2041 தை மாதம்
மாலை 52. மணி 1 ஜனவரி 2010

அன்பார்ந்த வாசகப் பெருமக்களே!

வணக்கம்.

புதுமணம் கமழும் இனிய தமிழ்ப்புத்தாண்டு பொங்கல் தினத்தில் அடியெடுத்து வைக்கும் வாசகப்பெருமக்கள் அனைவருக்கும், 'உழவுக்கும் தொழிலுக்கும், வந்தனை செய்வோம்" எனும் பாரதியின் வாக்கினை நினைவு கூர்ந்து, எனது இனிய தமிழ்ப்புத்தாண்டு பொங்கல் நல் வாழ்த்தினை உரித்தாக்குகின்றேன்.

செந்தமிழ் இறைவன் திருமுருகனுக்குரிய விழாக்களில் சிறப்புடைய ''தைப்பூசத் திருநாளை'' இத்திங்களில் கொண்டாடிட உள்ளோம், சீரோடும் சிறப்போடும் கொண்டாடப்படும் தைப்பூசத் திருநாளினை அனைவரும் கொண்டாடி திருமுருகன் திருவருளைப் பெறுவோம்.

இப்புத்தாண்டின் முதல் இதழாக வெளிவரும் இவ்விதழ் அன்னை மீனாட்சியின் அருட்கடாட்சத்தை வெளி முகப்பாகவும், அருள்மிகு மதுரவள்ளித் தாயார் அற்புதக் கோலத்தினை உள் முகப்பாகவும் கொண்டு மலர்ந்துள்ளது.

பழநியம்பதியின் திருநாமத்தை உச்சரிப்பதால், பழவினைபோம், தெய்வீகம் பெறுவர், வறுமை மட்டுமன்றி உயிர் உய்தி பெற வழி வகுக்கும், நாளும் அலைந்து திரியும் ஆன்மா அடங்கி ஒடுங்கி அமைதி பெறும், பழநியம்பதியின் திருநாமமே ஆன்மாவுக்கான விடியல். "தைப்பூச அருட்பெருஞ்சோதியாக" விளங்கும் பழநியம்பதி முருகன் மொழிப் பதிமே நம் நெஞ்சத்திற்குத் தஞ்சம் என அருணகிரிநாதரின் அறிவுறுத்தலை தொகுத்து "நெஞ்சமே தஞ்சம் பழநிப்பதம்" எனும் தலைப்பில் வழங்கியுள்ளார் தமிழாகரர் .தெ. முருகசாமி அவர்கள்.

நாளும் பற்றில்லாதவராகிய இறைவனை நெஞ்சில் நினைத்து, வாயால் போற்றி மெய்யால் தொழுது வணங்கி பற்றுக்களைப் பற்றறப்போக்கிட வேண்டுமென வள்ளுவப் பெருந்தகையின் வாக்கினையும், அப்பர் பெருமானின் வாக்கினையும் தொகுத்து இறைவனின் திருவருள் பெறும் வழியை வடித்துக் கொடுத்துள்ளார், நல்லாசிரியர் சிவத்தொண்டர் ச. இராமகிருஷ்ணன் அவர்கள்.

இந்தியத் திருநாடு உலகத்திலேயே உன்னத இடத்தைப் பெற வேண்டுமாயின் அனைத்து விரல்களும் மொத்தமாய் சேர்ந்து உத்தமப் பணிகளை உவகையுடன் செய்தால் உன்னதமடைவது உடனே நிகழும் என சிறப்பானதொரு சிந்தனை பெட்டகத்தை "உழைப்பே தியானம்'' எனும் தலைப்பில் வழங்கியுள்ளார் திரு.வெ.இறையன்பு இ.ஆ.ப., அவர்கள்.

காஞ்சி வரதனுக்கும், பெருந்தேவித் தாயாருக்கும் நடைபெறும் நவராத்திரி விழாவின் மாண்புகளை வர்ணனை வடிவில் அழகிய வண்ணப்படங்களுடன் வடிவமைத்து கொடுத்துள்ளார் திருவரங்கத்து இந்திரா. ஆராவமுதன் அவர்கள். யோக மார்க்கத்தினை குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்த பெருமிழலைக் குரும்பரின் சிறப்புகளை சித்தரித்துள்ளார் புலவர் க. சுகுமாரன் அவர்கள்.

இடும்பன் வரலாற்றை இனிய ஆன்மிக நடையில் வழங்கியுள்ள திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் கட்டுரை அவரது நினைவலையாக இவ்விதழில் வெளிவந்துள்ளது.

புளியறை, அருள்மிகு தெட்சிணாமூர்த்தி திருக்கோயில் சிறப்புகளும், காசி அந்தணர்கள் வழிபடும் கிராம அர்த்தஞரதீஸ்வரர் ஆலய சிறப்புகளும் இவ்விதழில் திருத்தல உலாக்களாக வெளிவந்துள்ளன. முனைவர் திரு. டி.எஸ். ராமசுவாமி அவர்களின் "கண்டேன் கமல மலர்ப் பாதம்" எனும் தொடரும், செயல் அலுவலர் திரு. ராமநாதபிள்ளை அவர்களின் உலகம் உய்ய உதித்த உடையவர் தொடரும் இவ்விதழில் தொடர்ந்து வெளிவந்துள்ளன. அனைவரும் இதழினைப் படித்து இன்புறுவோமாக!.

ப.ரா. சம்பத்

இந்துசமய அறநிலையத்துறை
119. உத்தமர் காந்தி சாலை,
சென்னை – 600 034.

(ப.ரா. சம்பத், இ.ஆ.ப.)
ஆணையர்



# குறளோவியம்

**க**ல்லைக் கலையாக்கும் சிற்பியொருவனும், சித்திரங்களைப் பேசவைக்கும் ஓவியன் ஒருவனும் இயற்கைக் காட்சிகளைக் கண்டு மகிழ்ந்தவாறு மலைச் சாரலில் நடந்து கொண்டிருந்தனர். இளங்காற்றின் இன்பத் தழுவல் அவர்தம் கற்பனை உள்ளத்திற்கு அமுதமாக இருந்தது. கரிய யானைகளும் வெள்ளைக் குதிரைகளும் மலைமுகடுகளில் நடை பழகுவதுபோல் வான்முகில்கள் பல்வேறு வடிவங்களில் பரவிக் கிடந்தன. இருவரும் தாங்கள் படைத்த அற்புதக் கலைகளைப் பற்றி ஒருவரோடொருவர் உரையாடி மகிழ, அந்த வளம் கொஞ்சும் பகுதி ஏற்றதாக இருந்ததை உணர்ந்து, உவகை கொண்டனர். பெருங்காற்றில் வேகமாக அசைந்தாடும் நரை மூதாட்டியின் வெள்ளிய கூந்தலையொத்துத் தொலைவில் காட்சி தந்த நீர்வீழ்ச்சியைப் போல, தான் ஒரு ஓவியம் தீட்டியிருப்பதாகப் பெருமைப்பட்டுக் கொண்ட நண்பனைப் பார்த்து,

"அதோ மயிலாடுவதை மான் ஒன்று பார்த்துக் கொண்டு நிற்கிறதே, அதேபோலச் சிற்பமொன்று நேற்றுத்தான் கல்லில் வடித்து முடித்தேன்" என்று களிப்புமிகக் கூறினான் அந்த சிற்பி.

உரையாடலுக்கிடையே ஓவியன், விழிகளை அகல விரித்தவாறு, "அடேடே! யாரது? அழகே உருவெடுத்து வருவதுபோல தெரிகிறதே" எனத் திகைத்து நின்றான். அவன் நோக்கிய திக்கில் சிற்பியும் நோக்கினான். வருவது யார் என்று சிற்பிக்குத் தெரியும். ஓவியன் எதிரே வரும் அழகோவியத்தை வர்ணித்திடத் தொடங்கிவிட்டான்.

"நண்பரே! நான் இதுவரையில் இப்படி ஒரு அழகின் மலர்ச்சியை என் தூரிகையால் உருவாக்கியதே இல்லை."

"ஓவியரே! வருவது வண்ணக் கிளியல்ல; வடிவழகன் – கட்டிளங்காளை– அது தெரிகிறதல்லவா உமக்கு?"


"தெளிவாகத் தெரிகிறது. தேன் மணக்கும் தமிழால் இந்த ஆணழகனைப் புகழ்ந்து பாட அருகில் யாரும் புலவர்கள் இல்லையே என்று கவலைப்படுகிறேன். அவன் நடை கண்டு வியக்கிறேன். அண்மையில், வந்து கொண்டிருக்கிறானே – ஆகா– அவன் முகத்தில்தான் எவ்வளவு கவர்ச்சி – வண்ணத் தூரிகையின் வளைந்த நுனிபோல வாகான இளம் மீசைகள் – செந்தாமரையின் இதழை எடுத்து அவனது மேனிக்குத் தோலாக்கினாளோ இயற்கை அன்னை? சிற்பியாரே! அர்ச்சுனன், மன்மதன், கண்ணன், முருகன் என எத்தனையோ ஆடவரைப் பற்றிப் படித்துமிருக்கிறேன், அந்த ஆணழகர்களை ஓவியமாகத் தீட்டியும் இருக்கிறேன். ஆனால் இன்று காணும் ஆண்மகனின் எழிலுக்கு அவை ஈடாகமாட்டா என்பதே என் கருத்தாகும்."

ஓவியனின் புகழ்ப்பாட்டை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த சிற்பி, சிரித்துக்கொண்டே பேச ஆரம்பித்தான்.

''உமது பாராட்டு அனைத்தும் பொருத்தமானதே! ஆனால் ஒன்று– நீர் இப்போது காணுகிற அந்த அழகின் உருவம் மனிதனல்ல; மண்ணால் மிகத் திறமையாகச் செய்யப்பட்ட ஒரு பொம்மை."

இதைக் கேட்டதும் ஓவியனுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

"என்ன விளையாடுகிறீர்? உமது கூற்றை நம்பிட நான் ஒன்றும் அறிவிலி அல்ல! பொம்மை, இப்படித்தான் நடந்து வருமோ? நம்மை நோக்கி வந்து கொண்டேயிருக்கிறானே – அடேடே இடையே ஒரு சிறு வாய்க்கால் –



அதைக் கூடத் தாண்டிப் பாய்ந்து வருகிறான். பொம்மையாம், பொம்மை! நன்றாக வேடிக்கை செய்கிறீர்!"

"ஓவியரே! பொம்மையல்ல – உண்மைதான்! மனிதன்தான்! நானறிவேன் இவனை நன்றாக! ஆனால் ஒன்று; இவனை மனிதன் என்று யார் ஒத்துக்கொண்டாலும் சரி; திருவள்ளுவர் ஒத்துக்கொள்ளத் தயாராக இல்லை."

''அப்படியென்றால்? புரியும்படியாகச் சொல்லும் சிற்பியாரே!"

"நுட்பமானதும் ஆராய்ந்திடக்கூடிய தெளிவு நிறைந்ததுமான அறிவு இல்லாத ஒருவன், எவ்வளவு அழகும் கவர்ச்சியும் உடையவனாக இருந்தாலும்கூட, அவன் மண்ணால் உருவாக்கப்பட்ட பொம்மைக்குச் சமமானவனே என்று வள்ளுவர் கூறியிருக்கிறார். அதற்கு சரியான எடுத்துக்காட்டுத்தான் இவன்."


பேசிக் கொண்டிருக்கும்போதே, அந்த அழகன் அவர்களுக்கு மிக அருகே வந்துவிட்டான். சிற்பி, அவனைப் பார்த்து, "என்ன அழகா! நலம்தானே?" என்று கேட்டுவிட்டு அவனுக்கு ஓவியனை அறிமுகப்படுத்தி வைத்தான்.

"ஓகோ! ஓவியரா நீர்? இதுவரையில் என்னைப்போல ஒரு அழகனைப் படமாக வரைந்ததுண்டா? வரைந்திருக்க முடியாதே!"

அழகனின் சொற்கள் செவியில் விழுந்ததும் ஓவியன் சிற்பியைப் பார்த்து, "நீர் கூறியது நூற்றுக்கு நூறு உண்மை" என ஒத்துக் கொண்டான்.

**"நுண்மான் நுழைபுலம் இல்லான் எழில்நலம்**
**மண்மாண் புனைபாவை யற்று."**
***அதிகாரம் 41 கல்லாமை பாடல் 407***

**மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் குறளோவியம் நூலிலிருந்து நன்றியுடன் எடுத்து வெளியிடப்படுகிறது.**





## அருள்மிகு தாயார் 108 போற்றிகள்




1. ஓம் அஞ்சிலைவல்லியே போற்றி
2. ஓம் அநந்தநாயகியே போற்றி
3. ஓம் அபிடேகவல்லியே போற்றி
4. ஓம் அம்புயவல்லியே போற்றி
5. ஓம் அமுதகடவல்லியே போற்றி
6. ஓம் அமுதவல்லியே போற்றி
7. ஓம் அரங்கநாயகியே போற்றி
8. ஓம் அரவிந்தவல்லியே போற்றி

9. ஓம் அரிலக்குமியே போற்றி
10. ஓம் அலர்மேல்மங்கையே போற்றி
11. ஓம் அழகியவல்லியே போற்றி
12. ஓம் அன்னநாயகியே போற்றி
13. ஓம் அன்னையே போற்றி
14. ஓம் ஆதிநாதவல்லியே போற்றி
15. ஓம் இந்திரையே போற்றி
16. ஓம் இலக்குமிநாச்சியே போற்றி
17. ஓம் இரமாமணியே போற்றி
18. ஓம் இறைவியே போற்றி
19. ஓம் உய்யவந்தவளே போற்றி
20. ஓம் உருப்பிணி நங்கையே போற்றி
21. ஓம் உலகநாயகியே போற்றி
22. ஓம் உறையூர்நாச்சியே போற்றி
23. ஓம் என்னைப் பெற்றதாயே போற்றி
24. ஓம் ஒண்டொடியாளே போற்றி
25. ஓம் கடல் மகளே போற்றி
26. ஓம் கண்ணபுரநாயகியே போற்றி
27. ஓம் கலியாணவல்லியே போற்றி
28. ஓம் கருந்தடங்கண்ணியே போற்றி
29. ஓம் கலைவாணியே போற்றி
30. ஓம் கற்பகவல்லியே போற்றி
31. ஓம் கனகவல்லியே போற்றி
32. ஓம் காடுறைவல்லியே போற்றி
33. ஓம் குலமாமகளே போற்றி
34. ஓம் குழைக்காதுவல்லியே போற்றி
35. ஓம் குழந்தைவல்லியே போற்றி
36. ஓம் குறுங்குடிவல்லியே போற்றி
37. ஓம் கோதைநாச்சியே போற்றி
38. ஓம் கோமளவல்லியே போற்றி
39. ஓம் கோளூர்வல்லியே போற்றி
40. ஓம் சண்பகவல்லியே போற்றி
41. ஓம் சத்தியபாமையே போற்றி
42. ஓம் சானகியே போற்றி
43. ஓம் சாரநாயகியே போற்றி
44. ஓம் சீதையே போற்றி
45. ஓம் சீவரமங்கையே போற்றி
46. ஓம் சுடர்க்கொடியே போற்றி
47. ஓம் சுந்தரவல்லியே போற்றி
48. ஓம் செங்கமலவல்லியே போற்றி
49. ஓம் செல்வத் திருக்கொழுந்தே போற்றி
50. ஓம் செல்வியே போற்றி
51. ஓம் சௌந்தரிய வல்லியே போற்றி
52. ஓம் தஞ்சைநாயகியே போற்றி
53. ஓம் தடங்கண்ணியே போற்றி
54. ஓம் தலைச் சங்கத் தமிழே போற்றி
55. ஓம் திங்கள் வினைதீர்த்த திருவே போற்றி
56. ஓம் திருமாமகளே போற்றி
57. ஓம் திருவே போற்றி
58. ஓம் தேவியே போற்றி
59. ஓம் நங்கையே போற்றி
60. ஓம் நப்பின்னையே போற்றி
61. ஓம் நம்பிக்கை நாச்சியே போற்றி
62. ஓம் நிலமங்கைவல்லியே போற்றி
63. ஓம் பங்கயச் செல்வியே போற்றி
64. ஓம் பத்மாசன நாச்சியே போற்றி
65. ஓம் பத்மாமணி நாச்சியே போற்றி
66. ஓம் பரிமளவல்லியே போற்றி
67. ஓம் பவளவல்லியே போற்றி
68. ஓம் பால்மொழியே போற்றி
69. ஓம் பாவையே போற்றி
70. ஓம் புருடோத்தமநாயகியே போற்றி
71. ஓம் புளிங்குடிவல்லியே போற்றி
72. ஓம் பூங்கோவல் நாச்சியே போற்றி
73. ஓம் பூமகளே போற்றி
74. ஓம் பூமிதேவியே போற்றி
75. ஓம் பூர்வா தேவியே போற்றி
76. ஓம் பூவார் திருமகள் நாச்சியே போற்றி
77. ஓம் பெண்கனியே போற்றி
78. ஓம் பெண்மைக் காப்பே போற்றி
79. ஓம் பெரிய பிராட்டியே போற்றி
80. ஓம் பெருஞ்செல்வ நாயகியே போற்றி
81. ஓம் பெருந்தேவியே போற்றி
82. ஓம் பொற்கொடி நாச்சியே போற்றி
83. ஓம் பொற்றாமரையாளே போற்றி
84. ஓம் பொன்னே போற்றி
85. ஓம் மட்டவிழும் குழலியே போற்றி
86. ஓம் மடவரல்மங்கையே போற்றி
87. ஓம் மண்மகளே போற்றி
88. ஓம் மதுரவேணியே போற்றி
89. ஓம் மரகதவல்லியே போற்றி
90. ஓம் மலர்க்கிழத்தியே போற்றி
91. ஓம் மலர்க்குழலியே போற்றி
92. ஓம் மாசறுமணியே போற்றி
93. ஓம் மாயா தேவியே போற்றி
94. ஓம் மிதிலைச் செல்வியே போற்றி
95. ஓம் மெல்லியலே போற்றி
96. ஓம் மென்னோக்கியே போற்றி
97. ஓம் மேகவல்லியே போற்றி
98. ஓம் மையகண்ணியே போற்றி
99. ஓம் மோகூர்வல்லியே போற்றி
100. ஓம் வகுளவல்லியே போற்றி
101. ஓம் வாசலக்குமியே போற்றி
102. ஓம் வேள்விப் பொருளே போற்றி
103. ஓம் விமலையே போற்றி
104. ஓம் வித்துவக்கோட்டு வல்லியே போற்றி
105. ஓம் வேதவல்லியே போற்றி
106. ஓம் வேளுக்கைவல்லியே போற்றி
107. ஓம் வைகுந்தவல்லியே போற்றி
108. ஓம் வைதேவியே போற்றி போற்றி

நிறைவாக அந்தந்த திருத்தலத்திற்குரிய தாயார் பாடலை ஓதி போற்றியை நிறைவு செய்யலாம்.

# "நெஞ்சமே! தஞ்சம் பழநிப்பதம்"



பார்புகழ் பழநி என்றதுமே அனைவரது நினைவிற்கும் பஞ்சாமிர்தமும் விபூதியும்தான் முதலில் தோன்றும். அந்நினைவிற்குப் பின்னரே அவ்விரண்டையும் நாளும் அபிஷேகமாகக் கொள்ளும் பழநிப் பண்ணவனான பழநியாண்டவன் அடுத்து நினைவுக்கு வருவான். இவ்வுண்மை, இன்று நேற்று உணரப்பட்ட உண்மையன்று. வழிவழியாக உணரப்பட்டது என்பதைக் குறிக்கும் விதமாக அருணகிரிநாதர் தாம் பாடிய கந்தரலங்காரத்தில்,


**படிக்கின் றிலைபழ நித்திரு**
**நாமம்படிப்பவர்தாள்**
**முடிக்கின் றிலைமுரு காஎன்**
**கிலைமுசியாமலிட்டு**
**மிடிக்கின் றிலைபர மானந்த**
**மேற்கொள விம்மிவிம்மி**
**நடிக்கின் றிலைநெஞ்ச**
**மேதஞ்ச மேது நமக்கினியே!**

என்கிறார். பழநியம்பதியின் நாமத்தைப் படிப்பதால் படிப்போர்க்குப் பழவினைபோம் என்பது அருணகிரிநாதரின் அனுபவம் போலும்! ஏனெனில் இவ்வனுபவ உண்மை இக் கந்தரலங்காரப் பாடல் முழுவதிலும் விரவிக் கிடக்கின்ற உண்மையால் உணரமுடிகிறது. ஆண்டவனது திருநாமத்தை மந்திரமாகக் கூறினால் பலன்கிட்டும் என்பதைப்போல அவ் ஆண்டவனின் சான்னித்தியம் நிறைந்த ஊரை மந்திரமாக உச்சரித்தாலும் பலன் கிட்டும் என்பது பொதுவான ஆன்மீக உலகின் அழுத்தமான கருத்தாகும். அருணகிரியார்,

**"கைத்தல நிறைகனி யப்பமொ**
**டவல்பொரி**
**கப்பிய கரிமுக னடிபேணிக்**
**கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவ**
**கற்பகம் எனவினை கடிதேகும்."**

என விநாயகப் பெருமானின் திருநாமமாகிய "கற்பகம்' என்றாலேயே வினைகள் விலகிவிடுமாம் என்றார். இதுபோலவே "பெருந்துறையே என்று பிறப்பறுத்தேன்" என மணிவாசகர் திருப்பெருந்துறையாம் ஊர்ப்பெயரை உச்சரித்தே உய்தியடைந்ததாகக் கூறுகிறார். எனவே பஞ்சாமிர்தம்போல் இனிப்பதான பழநித் திருநாமமே நெஞ்சத்திற்குத் தஞ்சம் என்கிறது கந்தரலங்காரப்பாடல்.

பாடலில் உள்ள படிப்பது என்பது வாய்விட்டுப் படிப்பதைஉணர்த்தும், அப்படிப் படிக்கும் போது படிக்கும் பொருள் படிப்போர்க்கன்றி அதனைப் பக்கமிருந்து கேட்போர்க்கும் பலன் நம்பிக்கையாகும். **"விரதமெல்லாம் மாண்ட மனத்தார் மனத்தான் கண்டாய்"** என்று விரதம் பூண்டவர்களைக் கடவுள் அம்சமாகக் கருதுகிறார் அப்பரடிகள். இதைத்தான் மெய்கண்டார் **"மாலற நேயம் மலிந்தவர் வேடமும், ஆலயந் தானும் அரன்எனத் தொழுமே"** என்று அடியாரைச் சிவனாகவே வணங்குவதைக் கூறினார். இந்த ஆன்மீக உணர்வின் அடிப்படையில் பழநித் திருநாமத்தைப் படிப்போர் தெய்வாம்சம் பெறுவர் என்பதை அருணகிரிநாதர் சொல்லாமல் சொல்வதாக அமைந்ததுதான் **"படிக்கின்றிலை பழநித் திருநாமம், படிப்பவர்தாள் முடிக்கின்றிலை"** என்ற தொடராகும்.



உண்டாகும் என்பது கருத்து. ஆக படிப்பவர் தம்மையறியாமலேயே கேட்போர்க்குப் பலனைச் செய்வதால், பழநித் திருநாமத்தைப் படிப்பவர் சராசரி மாந்தரினும் தெய்வசான்னித்தியம் பெற்றவராக மாறிவிடுவதால் அத்தகையோரின் திருவடியைத் தம் தலையார வணங்க வேண்டும் என வற்புறுத்தவே அருணகிரிநாதர் தன் நெஞ்சைப் பார்த்து "படிப்பவர் தாள் முடிக்கின்றிலை" என்றார்.

தெய்வ வழிபாட்டுடன் தெய்வப் பனுவல்களைப் படிப்பதால் அவர்கள் தெய்வீகம் பெற்றவராகக்கருதப்படுவார் என்பது வழிவழியான ஆன்மீக


இப்படிப்பழநித் திருநாமத்தை உச்சரிப்பதன் தொடர்ச்சியாகவே அவ்வூர் சான்னித்தியம் பெற்று விடுவதால் அச்சான்னித்திய ஊரில் குடும்பத்தோடு குடும்ப உறுப்பினனாகக் குடிகொண்டிருக்கும் பழநிப் பண்ணவனை 'முருகா' எனக் கூறினால் பலன் கிட்டும் என்பதைக் கூறவே **"முருகா என்கிலை"** என்றார், **"மெய்ம்மை குன்றாமொழிக்குத் துணை முருகா எனும் நாமங்கள்"** என அருணகிரியார் வேறொருபாடலில் கூறுவதால் அப்பெயரை மந்திரமாக அருச்சிக்க வேண்டும் என்றார்.

இங்ஙனம் பழநி என ஊரையும்

முருகா என அவ் ஊர்த் தெய்வத்தையும் உச்சரிக்கையில் வாழ்வில் வறுமையால் மெலிதல் இல்லை என்பதைக் கூறவே **"முசியாமலிட்டுமுடிக்கின்றிலை"** என்றார். முசியாமல் என்பதற்கு வறுமையால் வாடாமை என்பது பொருள். முடிக்கின்றிலை என்றால் வறுமையைப் போக்கிக் கொள்ள வழியறியாமல் இருக்கலாமோ? என்பது பொருள். ஆக பழநியையும் அவ்வூர்த் தெய்வத்தையும் உச்சரிக்க உச்சரிக்க வறுமை இல்லை எனத் தெரிகிறது. ஈண்டு கூறும் வறுமை என்பது செல்வமின்மையான பொருள் வறுமையை மட்டுமின்றி உயிர் உய்தி பெறுவதற்குத் தடையாக உள்ளமும் மலக் கட்டால் வரும் துன்பமும் வாரா என்பதும் கருத்தாகும்.

இப்படிப் பழநியம்பதியையும் தெய்வ த்தையும் உச்சரிக்கும்போது நமக்குக் கிட்டு வது பரமானந்தம் என்பதால் அம்மந்தி ரத்தைப் படிக்கவும் கேட்கவுமாக மெய் புளகாங்கிதம் எய்தி நிற்பதற்கு அடையா ளமாய் விம்மி விம்மி உச்சரிக்க வேண்டும் எனக்கூறும் அருணகிரியார் அங்ஙனம் நிற்பதே ஆன்மாவிற்கான அடைக்கலம் என்பதை நெஞ்சமே நீ உணர்வாயாக எனக்கூற **"பரமானந்தம்மேற்கொள விம்மி, விம்மி, நடிக்கின்றிலை, நெஞ்சமே தஞ்சமேது நமக்கு இனியே"** என்றார்.

நாளும் அலைந்து திரியும் பறவைகள் இளைப்பாற, கூடு உள்ளது போல அலைச்சலான ஆன்மா அடங்கி ஒடுங்கி அமைதிபெறப் பழநித் திருநாமப் பதமே இதமான தஞ்சம் என்பதால் தைப்பூசப் பெருமை கொண்ட பழநியம்பதியான திருநாமமே நம் ஆன்மாவுக்கான விடியல் என்பது அருணகிரிநாதரின் அறிவுரையாகும். இதனை வேறொரு வகையாலும் அவர், வேறொரு பழநித்திருப்புகழ் வாயிலாக வற்புறுத்துகிறார். விண்ணுலகத்து அமரர்கள் பழநி முருகனை மலர்தூவி வேதம் சொல்லி துதிப்பதைவிட சர்வேசுரனான பராபரனே நாளும் விரும்பித்தொழ முருகன் பழநி மலையில் வீற்றிருப்பதாகக் கூறும்போது,



**பலமலர் களேதூவி ஆரண நவின்று**
**பரவி இமையோர் சூழ நாடொறும்**
**இசைந்து**
**பழநிமலை மீது ஓர் பராபரன்**
**இறைஞ்சும்பெருமாளே!**

என்கிறார், இதில் ஓர் பராபரன் என்ற சொற்கள் ஒப்பற்ற பராபரன் எனப் பொருள் தந்தாலும், ஓர்தல் என்பது சிந்தித்தல், ஆராய் தல் என்ற பொருளின்படி, சிவபெருமானே நாளும் சிந்தித்துத் தொழும் முருகன் என்ற கருத்தில் கூறப்பட்டுள்ளதால் மண்ணுலகில் வாழும் நாம் பழநிப் பதத்தைத் தஞ்சமென அடைய வேண்டும் என்பது அருணகிரிநா தரின் விருப்பம் எனலாம்.

இவ்வாறு அருணகிரிநாதர் கூற அவரது சில திருப்புகழ் பதங்களே (சொற்களே) காரணம் என்றாலும் தகும். திருவாவினன் குடியாம் பழநியில் உள்ள முருகன் தைப்பூச ஜோதி தரிசனத்தைத் தரவல்லவனாய் இருப்பதோடு சுருதிமுடிமோனஞ் சொல் சிற்பரம எனத் தொடங்கும் திருபுகழிலும்

**பணியுமடி யார்சிந்தை மெய்ப்பொருள**
**தாகநவில்**
**சரவணப வாஎன்று வற்கரமு**
**மாகிவளர்**
**பழநிமலை மேனின்ற சுப்ரமணி**
**யாஅமரர் பெருமாளே!**

என முருகன் பழநிமலையில் ஜோதி சொரூபனாக நிற்பதாகக் கூறுகிறார்.

பழநியில் வீற்றிருக்கும் முருகன் அடி யாரின் மெய்ப்பொருளாகவும் சரவணபவா என்ற திருநாமத்தைப் பெற்றவனாகவும் ஜோதி ஒளியாக விளங்கும் பழநி மலைமேல் சுப்ரமணியனாய் தேவர்கள் தலைவனாய் வீற்றிருக்கின்றான் என்பது மேற்படியான திருப்புகழ் பாடல் வரிகளின் பொருளாகும். இதில் வல்கரம் (வற்கரம்) என்பது வலிய ஒளி என்பதாகும், அதாவது பேரொளி. எனவே தைப்பூச அருட்பெருஞ்ஜோதியாக விளங்கு பவன் பழநியம்பதி முருகன் என்பதால் அப்பழநி என்ற மொழிப்பதமே நம் நெஞ்சத் திற்குத் தஞ்சம் என்பது அருணகிரிநாதரின் அலங்கார அறிவுறுத்தலாகும்.

*தமிழாகரர்* **தெ.முருகசாமி**
*புதுச்சேரி–9*

# மனமாசு நீங்கிவாழ இறைவனின் திருவருளை வேண்டுவோமாக!

**ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர்களே!**

தங்களின் பொன்னார் திருவடிகளுக்கு வணக்கம்.

**உ**டம்பிலுள்ள மாசு போக நீராடுகின்றோம். துணியில் உள்ள மாசுபோகத் தோய்க்கின்றோம். பற்களில் உள்ள மாசு போகத் தேய்க்கின்றோம்.

மனதிலுள்ள மாசுபோக என்ன செய்ய வேண்டும்? இந்த உடம்பில் மாசு இருப்பது போல் மனதிலும் மாசு இருக்கத்தானே செய்யும்.

**"மனத்துக் கண் மாசிலன் ஆதல்**
**அனைத்தறன் ஆகுல நீர பிற,"**

என்று திருவள்ளுவர் கூறுகின்றார். முதலில் மனதிலுள்ள மாசைப் போக்கிக் கொள்வது தான் நல்லவழி, அதுதான் அறம். மற்றதெல்லாம் ஆடம்பரம்.

மனத்தில் உள்ள மாசு எது? அவா. அதாவது ஆசை. ஆசை என்னும் சொல்லின் பொருள் என்ன? உங்களிடம் உள்ள பொருளின் மேல் விருப்பம் இருந்தால் அதற்கு ஆசை என்ற பொருள் இல்லை. அப்பொருளின் மீதுள்ள விருப்பத்திற்குப் பற்று என்று பெயர். இந்தப் பற்றும் விடவேண்டியதுதான்., ஆனால் இது கெடுதல் செய்யாது. பாவத்தை உண்டாக்காது.

ஆசைதான் பாவத்தை உண்டாக்கும். ஆசை என்பது இன்னொருவர் பொருளை விரும்புவதாகும்.

எனவே ஆசை அறவே கூடாது.

**பற்றவா வேரொடு பசையற பிறவி**
**போய் முற்ற–கம்பர்**

**பற்று–தனக்குரிய பொருளில் வைக்கும் விருப்பம்.**

**அவா–பிறருக்குரிய பொருளில் வைக்கும் விருப்பம்.**

பற்று இருக்கின்ற வரைக்கும் பிறவி இருந்து கொண்டே தான் இருக்கும். பற்று அவா என்ற இரண்டும் பிறவியைத் தருபவை. பற்று வைத்திருப்பதால் குற்றம் இல்லை. ஆனால் பிறவி தொலையாது. ஆசை வைத்திருப்பதால் பெருங்கேடு வரும். முதலில் ஆசையைத் தொலைத்துப் பின்னர் பற்றையும் ஒழித்துவிட வேண்டும்.

**அற்றது பற்றெனில் உற்றது**
**வீடு–நம்மாழ்வார்**

இந்தப் பற்றைத் துறப்பதற்கு என்னவழி? நல்ல வழியுண்டா? உண்டு. ஒரே ஒரு வழி தான். மனைவிப்பற்று, மக்கள் பற்று, செல்வப் பற்று இவைகளையெல்லாம் விட்டுவிடு என்று கூறக்கேட்கும் போது விட்டுவிடலாம் என்று தோன்றும். ஆனால் அது நடக்காத செயல்.


உணவுப்பற்று, உடம்புப்பற்று, செல்வப் பற்று, நாட்டுப்பற்று, மொழிப்பற்று, போன்று உங்களிடம் உள்ள பல பற்றுக்களோடு இன்னொரு பற்றையும் சேர்த்துப் பற்றிக் கொள்ளுங்கள்.

'நூறு பற்றுடன் நூற்றொன்றாக இருக்கட்டும்'–என்கிறார் திருவள்ளுவர். அது என்ன பற்றோ? **பற்றற்றான்பற்று**. அப்பற்றற்றான் பற்று முதிர முதிர ஏனைய பற்றுக்கள் தானே விலகிப்போகும்.

**வைரத்தினை வைரத்தால் அறுப்பது போல, பற்றைப் பற்றினால் அகற்ற வேண்டும்.**

பற்றில்லாதவராகிய கடவுளுடைய பற்றினால் பற்றுக் களைப் பற்றறப் போக்கலாம்.





'பற்றுக பற்றற்றான் பற்றினை
அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு'
–குறள்

'நிலையழி கவலைகள் கெடவுள
தருள்விழி
நின்றுற் றிடவே தான்
நின திருவடி மலரினை
மனதிலுற
நின்பற் றடை வேனோ!'
– அருணகிரிநாதர்

## கடவுள் எங்கே இருக்கின்றார்?

ஆண்டவன் எங்கே இருக்கின்றான் என்ற கேள்விக்கு அப்பர் அடிகள் அருமையாக விடை கூறுகின்றார்.

சூரிய மண்டலங்கள், அதற்கப்பால் வேறு பல மண்டலங்கள், அண்ட கோடி சரா சரங்கள் முதலிய இடங்களில் எல்லாம் ஆண்டவர் இருப்பாரானால் அதனால் நமக்கு என்ன பயன்? இவ்வளவு தூரத்திற் கப்பால் இருந்தால் எப்படி தொடர்பு வைத்துக் கொள்ள முடியும்.? சாதாரண மாக தொலைவில் இருக்கின்ற பெரியோர் களிடையே தொடர்பு வைத்துக் கொள்ள முடியவில்லையே! ஆகையால் ஆண்டவன் நமக்கு அண்மையில் இருக்க வேண்டும். இது நம்முடைய ஏக்கமாகவும், எண்ணமா கவும் அமைகின்றது. அப்பர் அதற்குச் சொல்லுகின்ற விடை **'மனத்தகத்தான்'** ஆண்டவன் மனத்தினுள் இருக்கின்றான் என்று சொல்லுகிறார். 'அவரை நாம் எப்படி வணங்குவது?' என்றால், **'தலையாலே நீ வணங்கு'** என்கிறார்.

**'மனத்தகத்தான், தலைமேலான் வாக்கினுள்ளான்;** வாயாரத் தன்னடியே பாடுந்தொண்டர் இனத்தகத்தான்' என்று கூறுகின்றார். ஆண்டவன் எங்கிருக்கிறார் என்றால் அவரை நினைக்கும் நெஞ்சத் திலும், வணங்கும் தலையிலும், பாடும் வாயிலும் இருக்கின்றான்.

**"வாயானை, மனத்தானை, மனத்துள் நின்ற கருத்தானை கருத்தறிந்து முடிப்பான் தன்னை"** இப்படிப்பட்ட வாக்கியங்கள் எங்கும் இல்லை. இவை அப்பர் அடிகளின் அனுபவத்தில் இருந்து வந்த திருவாக்கியங்கள். ஆதலின் மெய்யன் பர்களே! சிவநேயச் செல்வர்களே! பண்பாட்டுச் செல்வர்களே! நாளும் பற்றில் லாதவராகிய இறைவனை நெஞ்சால் நினைத்து, வாயால் போற்றி, உடலால் (மெய்யால்) தொழுது வணங்கி பற்றுக் களைப் பற்றறப்போக்கி நல்வாழ்வு பெறுவோமாக!

அன்பே சிவம்

தொகுத்தவர்: நல்லாசிரியர். சிவத்தொண்டன்
**க.இராமகிருஷ்ணன் எம்.ஏ;எம்.எட்.**

# உழைப்பே தியானம்

வெ.இறையன்பு இ.ஆ.ப.,


ஒரு நாடு செழிப்பதற்கு மழையைக் காட்டிலும் வியர்வையே முக்கியம். நெற்றி வியர்வை நிலத்தில் விழ. உழைக்க மறுப்பவர்களுக்குப் பெய்யும் மழை வீணாகிவிடும். உள்ளே போகிற நீர், வெளியே வந்துதான் தீரவேண்டும். விடலைப்பருவத்தில் வியர்வை வாய்க்காலாக வழியாவிட்டால், கடைசிக் காலத்தில் கண்ணீர் கால்வாயாகப் பெருக்கெடுக்கும்.

'மற்றவர்களுக்காகப் பணி செய்கிறோம்' என நினைத்தால் உடலில் தளர்வும், உள்ளத்தில் சோர்வும் ஏற்படும். "நமக்காகவே நாம் பணியாற்றுகின்றோம்" என்கிற உண்மை புரிந்தால், உழைப்பு களைப்பை வரவழைக்காது. ஈடுபாடு இல்லாமல், எந்தப் பணியைச் செய்தாலும் அது வயலுக்குப் பாய்ச்சும் வாய்க்காலாக இல்லாமல், விழலுக்கு இறைத்த நீராகிவிடும். நேரத்தை மாத்திரம் சேர்த்து வைக்க முடியாது. இன்று பணியாற்ற மறுத்தால், ஒருநாள் போனது போனதுதான். மகத்தான மண்டபத்தை உருவாக்க நினைக்கிறபோது, அதில் கலசம் வைக்கிறவர்கள் மட்டுமல்ல: கடைக்கால் எழுப்புபவர்களும் அக்கறையோடு பணியாற்றினால்தான், கட்டடம் காற்றில் இடிந்து விழாமல் காப்பாற்றப்படும்.

ஈடுபாடு என்பது தனித்து நிகழ்வது அல்ல. எல்லாவற்றிலும் அக்கறை கொள்பவர்களுக்குத்தான் உழைப்பில் ஈடுபாடு பிறக்கும். சாப்பாட்டைக்கூட சடங்காக உண்பவர்கள் இருக்கிறார்கள். சடலத்தைக்கூடப் பொறுப்புடன் புதைப்பவர்கள் இருக்கிறார்கள். நாம் எந்த ஒரு நேரத்திலும் செய்கிற பணியின் மீது வெறுப்பை வளர்த்துக் கொள்ளக்கூடாது.

விதையை விதைப்பவர்கள் மகசூல் செய்யும் போது 'பயிர் எப்படியிருக்கும்' என்பதை மனத்தில் காட்சிப்படுத்தித்தான் ஏர் பிடிக்க முனைகிறார்கள். 'இறுதியில் எப்படியிருக்கும்' என்பதை மனக்கண் முன் விரிவுபடுத்தினாலே உற்சாகம் பிறந்துவிடும், ஆர்வம் விளைந்துவிடும்.

வறண்ட பகுதியில், கையில் மண்வெட்டியுடன் புதர்களைக் கொத்திக்கொண்டிருந்த இளைஞன் ஒருவனை அவ்வழியே வந்த பெரியவர் ஒருவர் பார்த்தார்.




"எள் போட்டாலும் விளையாத இந்த இடத்தில் ஏன் வீணாகக் கொத்திக் கொண்டிருக்கிறாய்" என்று கேட்டார். அவனோ அதற்குத் தன் புன்னகையை மாத்திரம் பரிசாக அளித்துவிட்டு மறுபடியும் தன் பணியைச் செய்ய ஆரம்பித்து விட்டான். தன் தலையில் அடித்துக்கொண்டு



அப்பெரியவர் அந்த இடத்தை விட்டு நகர்ந்தார்.

பத்து ஆண்டுகளுக்குப் பிறகு, அந்த இடத்தை மறுபடியும் அவர் கடக்க நேருகையில் அடையாளம் தெரியாதபடி அது அழகாகி இருந்தது. அவர் விழிகள் வியப்பால் விரிந்தன. அப்போதும் அவன் அங்கே இருக்கிற செடிகளுக்கு இயற்கை உரத்தை இட்டுக்கொண்டிருந்தான். அவனிடம் அவர் கேட்டார், "மண் வளமில்லாத இந்நிலத்தில், மழைவளம் இல்லாத இப்பகுதியில் எப்படி உன்னால், இப்படியோர் சொர்க்கச் சோலையை உருவாக்க முடிந்தது". அவன் சிரித்தவாறே சொன்னான்,

"உங்கள் கண்களுக்கு இதைப் பார்க்கிறபோது களர்நிலமாகவே தெரிந்தது. ஆனால் எனக்கோ இதில் சோலை மட்டுமே தென்பட்டது. இதற்குள் ஒளிந்து கிடக்கும் சோலையை வெளிக்கொண்டு வர கருவியாய் இருப்பது மட்டுமே என் பணியாய் நினைத்தேன். என் கை



படபட மண் மசிந்தது. கல் கசிந்தது. பாறை இளகியது. வான் சுரந்தது. வளம் நிறைந்தது. நான் என் காட்சியில் கண்ட வடிவத்தை அனைவர் காட்சிக்கும் உட்படுத்தியது மட்டுமே என்னுடைய பணி. இதைச் செய்கிறபோது எனக்குள் இருந்த கடினப் பாறைகளும் தகர்ந்து போயின. பிடிவாதக் கல்லும் கரைந்து போனது. உண்மையில் நான் பண்படுத்தியது என் இதயத்தைத்தான் என்பதை உணர்ந்து கொண்டேன்".


உலகத்திலேயே தலைசிறந்த விடுதிகளைக் காட்டிலும், தாய் தயாரிக்கும் உணவே தன்னிகரற்றது என்பதற்குக் காரணம். அது ஈடுபாட்டுடன் ஆக்கப்படுவதால் தான். ஈடுபாட்டுடன் பணி செய்கிறபோது இயற்கையே நம் பக்கம் சாய்ந்து விடுகிறது. நம் வைராக்கியத்தைச் சோதித்துப் பார்த்துவிட்டு அது அளவில் அதிகம் என்பது தெரிந்தவுடன், இயைந்து கொடுக்க ஆரம்பித்து விடுகிறது.

இந்தியத் திருநாடு உலகத்திலேயே உன்னத இடத்தைப் பெறவேண்டுமென்றால் அணு ஆயுதங்களால் அது நிகழாது. பொருளாதாரப் புரட்சியாலும் நேர்ந்துவிடாது. அத்தனை விரல்களும் மொத்தமாய் சேர்ந்து, உத்தமப் பணிகளை உவகையுடன் செய்தால் உன்னதமடைவது உடனே நிகழும். தன்னிறைவு என்பது தானே முகிழ்க்கும்.

**நன்றி: பணிப்பண்பாடு நூலிலிருந்து.**

# இடும்பன்


செந்தண்மை மிக்க பைந்தமிழ் முனிவராகிய அகத்தியர், கந்தகிரி சென்று, கந்தவேளைச் சிந்தையன்புடன் தொழுது துதித்து, "ஐயனே! பன்னிரு கையனே! அடியேன் பொதிய மலையில் வைத்துப் பூசிப்பதற்கு, ஈண்டுச் சிவ சொரூபமாகவும் சக்தி ரூபமாகவும் விளங்கும், சிவமலை சக்திமலை என்ற இரு சிகரங்களையும் தந்தருளல் வேண்டும்" என்று வேண்டினார். வேண்டும் அடியார், புலவர், வேண்ட அரிய பொருளை வேண்டுமளவில் உதவும் வேலாயுதக் கடவுள் அவ்வாறே அகத்தியனாருக்கு அருமலைகள் இரண்டையும் அளித்தருளினார். அகத்தியனார் மகத்துவ மிக்க அத் திருமலைகள் இரண்டையும் பெயர்த்துக் கொண்டு பூவுலகின்கண் வந்தார். பூர்ச்சவனம் என்னும் தவம் வந்ததும், செவ்வேளின் திருவருளால் அச்சிகரிகள் இரண்டினையும் அங்கு வைத்துப் பொதியை நோக்கி வருவாராயினார்.



சூரபன்மன், சிங்கமுகன், தாரகன் என்னும் அசுரர்களின் சேனைகளுக்கும், அக்குலத் தினருக்கும் வில்வேதமாகிய அத்திர சத்திர வித்தைகளைப் பயிற்றியவன் இடும்பன். அவன் மனைவி இடும்பி சூராதி அவுணர்கள் வேலாயுதத்தினால் ஒடுங்கிய பின், வில்லாசிரியனான இடும்பன் தன் மனைவி இடும்பியுடன், வீர மகேந்திரபுரியை விடுத்து, சிவ சிந்தையுடன் வன சஞ்சாரம் புரிந்து கொண்டிருந்தான். ஒரு சிறந்த வனத்தில் சிவபெருமானை நேசித்துப் பூசித்தான். சிவபெருமான் தோன்றியருளினார். இடும்பன் எல்லையில்லாத மகிழ்ச்சியுடன் தொழுதான்; அழுதான். "எந்தையே! ஈசனே! இமையவர் நேசனே! அடியேன் அறுமுகக் கடவுளுக்கு அடிமையாகி அப்பரம கருணாநிதியின் திருவருளைப் பெற வேண்டும்," என்று வேண்டினான். அரனார் அவ்வரம் நல்கி மறைந்தருளினார்.

அவன் சிவமூர்த்தியை வழிபட்ட தலம் இடும்ப வனம் எனப்பட்டது. அது கோயிலூருக்குத் தென்கிழக்கே பத்துக் கல் தொலைவில் உள்ளது.

இடும்பன் மனைவியுடன் வன சஞ்சாரம் புரிந்து கொண்டு திருக்குற்றால மலையைச் சார்ந்தான். அங்கு அகத்திய முனிவரைக் கண்டு, அவரது அடிமலர் மீது வீழ்ந்து வணங்கி "தவப்பெருந்



திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்

தலைவரே! தயாநிதியே, அடியேன் சூராதி அவுணர்களின் வில்லாசிரியன், கந்தவேள் கருணையை நாடி நிற்கின்றேன். தேவரீர் முருகவேளின் சீடரன்றோ? சிறியேனைக் குமரவேளின் திருவருட்கு உரியவனாக்கி ஆண்டருள்வீர், அடியேன் உமது அடிமலர்க்கு அடைக்கலம்" என்று வேண்டினான்.

அகத்தியனார், அவனை அருட்கண்ணோக்கம் புரிந்து, 'அஞ்சேல்' என்று அங்கையமைத்துக் கூறுவார். "அன்பனே! உனக்குக் குமரவேள் திருவருள் கிடைக்கும். திருக்கேதார தலத்திற்கு அருகில் உள்ள பூர்ச்ச வனத்திலே சத்திகிரி, சிவகிரி என்ற இரு சிகரங்கள் இருக்கின்றன. அவற்றை எடுத்து நம் பொதிய மலைக்கு வருவையேல் உனக்குக் குமரநாயகன் திருவருள் கிடைக்கும். அழியாத புகழும் பெறுவாய். அத்திருமலைகளின் பெருமை சொல்லுந்தரமன்று; சென்று கொணர்தி" என்று பணித்தருளினார். அங்குச் செல்லும் வழியையும் உணர்த்திச், சடக்கர மந்திர உபதேசமும் செய்து அனுப்பினார்.

இடும்பன் தன் மனைவி இடும்பி என்பாள் காய், கனி, கிழங்குகள் தந்து உபசரித்து வர, குறுமுனியாகிய குருபரன் கூறிய வழியே சென்றான். இடையில் உள்ள திருத்தலங்களை எல்லாம் தரிசித்துக் கொண்டு பூர்ச்ச வனம் என்னும் திருத்தலத்தைச் சேர்ந்தான். அங்கு அகத்தியர் வைத்த சத்திகிரி சிவகிரிகளைக் கண்டு களித்தான். "யானே தவமுடையேன்; என் புண்ணியமே புண்ணியம்'' என்று உள்ளம் உவந்தான். பூஜைக்குரிய சாதனங்களை மனைவி ஆயத்தம் புரிந்து தர, இடும்பன் அம்மாமலைகளைப் பூசித்தான். அகத்தியர் உபதேசித்த சடக்கர மந்திரத்தை விதிப்படி ஜெபித்துக் கண்களை மூடி, ஒருமையுடன் தவம் புரிந்தான்.

அப்போது பிரமதண்டம் புயதண்டாகவும், அட்டதிக்கு நாகங்களும் கயிறுகளாகவும் அவனருகில் வந்தன. அவற்றைக் கண்டு அதிசயித்த அத்திருவாளன் துண்னென்றெழுந்து, எட்டு நாகங்களையும் உறி போற் சமைத்து, இரு மலைகளையும் அதில் வைத்துப் பிரம தண்டுடன் பிணித்து, மூல மந்திரத்தைச் சிந்தித்து,



முருகவேளை வந்தித்துக் காவடியாக்கி எடுத்துத் தோளில் வைத்தான். முழங்காலை மண்ணில் ஊன்றி எழுந்தான். "அரோகரா!" "அரோகரா" என்று கூவிக் கொண்டு தென் திசை நோக்கி நடந்தான். பல காதங்கள் கடந்தான்.

பன்னிருகட்பரமன், திருவிளையாட்டினால், வழி மயங்கி விந்தமலை வழியாக, ஸ்ரீசைலம், திருக்காளத்தி, திருத்தணிகை, திருக்காஞ்சி, திருவருணை, திருமுதுகுன்றம் முதலிய தலங்களைச் சேவித்துக் கொண்டு வந்தான். ஆங்காங்குக் காவடியை இறக்கி இறைவனை வழிபட்டு, மனைவி தேடித் தரும் காய்கனிகளை அருந்தி, தண்ணீர் பருகி, இளைப் பாறிக் கொண்டு சென்னிமலை என்ற புட்பகிரியைச் சார்ந்தான். அங்கு வழி தெரியாது மயங்கினான். அங்கு ஆறுமுக வேள் ஓர் அரசகுமாரனைப் போல் தோன்றி "இடும்பைக்கு இடும்பைத் தரும் இடும்பா' நீ இவ்வழியே போய் வராக மலையில் தங்கி, அவ்வழியே பொதியாசலம் போகக் கடவாய்," என்று கூறியருளினார்.

இடும்பன் அகமகிழ்ந்து வராக மலை வழி சென்று திருவாவினன்குடியை அடைந்தான். திருவேலிறைவன் திருவிளையாட்டால் மலைகள் மிகவும் பாரமாகித் தோளை வருத்தின. இடும்பன் சிறிது களைப்புடன் காவடியை இறக்கி வைத்து விட்டு, வாமதேவ முனியாச்சிரமஞ் சென்று, இடும்பி தந்த இனிய காய், கனி, கிழங்குகளை உண்டு. இளைப்பாறி, மீண்டும் மலைகளை தூக்கத் தொடங்கினான். எத்துணை முயன்றும் காவடி எழவில்லை. பெருமூச்சு விட்டான் மீண்டும் மீண்டும் பெரிதும் முயன்று எடுக்கலுற்றும் மலைகள் மேல் எழாமை கண்டு கவலையுற்றான். சுற்றும் முற்றும் பார்த்தான். சிவகிரியின் மீது ஒருபுறம் குராமர நிழலில் ஒரு சிறு குழந்தை நிற்பதைக் கண்டான்.

அசுரகுல திலகன் அதிசயித்தான். "இப்பாலகன் யாவன்? தேவகுமாரனோ? இயக்கனோ? சித்தனோ? முருகவேளோ?" என்று ஐயுற்று அருகிற் சென்றான்.

அமரர் போற்றுங் குமரநாயகன், பிடரியில் இருண்டு கருண்ட தலைமயிர் தொங்கவும், கருணையொழுகும் கண்களும், ஆயிரங்கோடி சூரியர் ஒருங்கே திரண்டாலன்ன ஒளி மிகுந்த

திருமேனியும், முப்புரிநூல் புரளும் திருமார்பும் தண்டு தாங்கிய திருக்கரமும் விளங்க நிற்கக் கண்டான். 'ஏ! குழந்தாய்! நீ யார் மகன்? இங்கு நீ தனித்து நிற்கும் காரணம் யாது? வழி தவறி வந்தனைகொல்? விரைந்து சொல்" என்று வினாவினான். முருகவேள் ஒன்றும் பதில் கூறாது முறுவல் புரிந்தனர்.

இடும்பன் ஆலகாலம் போல் சீறி, "ஏ மலையினின்றும் இறங்கி விலகிப் போ; யான் கொலையே புரியும் அசுரகுல குரு, வீணே துன்பத்தைத் தேடிக் கொள்ளதே?" என்றான். குழந்தை வேலவர் நகைத்து, ''அப்பா அசுரனே! இம்மலை எமக்கு இருக்கையாகும். உனக்கு வலிமையிருக்குமாயின் இவற்றை எடுத்துக் கொண்டு போதி'' என்றனர். இடும்பன் மிகவுஞ் சினங்கொண்டான். "ஏ பாலகனே! நீ மாயையில் வல்லவன் போலும். நன்று; நன்று. நான் மாயவனைச் சிவனாகக் குறுகச் செய்தருளிய குறுமுனிவரது அடியவன். உன் செருக்கையும் மாயையுங் காண்கின்றேன்," என்று கூறிக் கரங்களைப் பிசைந்தான். பற்களைக் கடித்தான். வாயை மடித்தான். புருவத்தை நெறித்தான். குராவடிக் குமரன் மீது பாய்ந்தான். குராவடிக் குழந்தை வேற்குமரக் கடவுள், தமது திருக்கரத்தில் விளங்கும் தண்டாயுதத்தினால், சிறிது தாக்கினார். மூதண்ட முகடு உடைந்து வீழ்ந்தது போல் இடும்பன் அலறி வீழ்ந்து மடிந்தான். நாகங்களும் பிரம தண்டும் அஞ்சியகன்று அகத்தியனார்பால் சென்று அஞ்சலி செய்து நிகழ்ந்ததைப் புகன்று தத்தம் இருப்பிடஞ் சேர்ந்தான்.

இடும்பன் இறந்த பேரொலியைக் கேட்க இடும்பி உள்ளம் பதைபதைத்து ஓடி வந்து கணவன் மீது வீழ்ந்து புலம்பினாள்.


"என் உயிர்த்துணைவா! குறுமுனியின் அருள் பெற்ற கொற்றவ! சூரர்க்கும் வில் வித்தை கற்பித்த வீராதிவீர! நின்னைக் கொன்ற வீரன் யாவன்? அந்தோ! நினையிழந்து நான் எங்ஙனம் வாழ்வேன்? பதியை இழந்த பாவி யானேனே. தெய்வமே! நின் சோதனையோ! முன்புரிந்த வினையின் வாதனையோ?" என்று பலவாறு புலம்பி அழுதாள். குராமரத்தின் நிழலில் நிற்குங் குழந்தையைக் கண்டாள். "இவர் தான் 'என் கணவரைக் கொன்றவர் போலும். சூரனைக் கொன்றவர் தான் சூரனது வில்லாசிரியராம் என் கொழுநரைக் கொல்லுதல் கூடும். இவர் தான் எம் குல முழுதும் ஆளவந்த குன்றம் எறிந்த கூர்வேலவர்; சூர் முதல் தடிந்த சீராளர்'' என்று திருவருள் உணர்த்த உணர்ந்தாள். ஓடி எம்பிரான் இணையடி மீது வீழ்ந்தாள். "தேவ தேவா!

மூவர் தொழும் முதல்வா! நினது திருவிளையாடலின் திறத்தை அறியாத எனது கணவனைக் கொல்வது முறையோ? கருணைக் கடலே!" என்று துதித்தாள். அவள் கண்களின்றும் கண்ணீர் ஆறாய்ப் பெருகியது. அங்குள்ள கல்லும் உருகியது.

அயில்வேற் கடவுள் மயில் மேல் காட்சி தந்தருளினார். கணங்கள் புடை சூழ்ந்தன; வேதங்கள் ஒலித்தன; தேவ துந்துபிகள் முழங்கின; கந்தவேள் கடைக்கண் கருணை இடும்பன் மீது வீழ்ந்தது. தூங்கி எழுந்த வனைப் போல் துண்ணென எழுந்தான். அண்டர் நாயகனைக் கண்டான். ஆராத காதல் கொண்டான்; ஆகுலத்தை விண்டான். "திருமுருகா! திருமால் மருகா! பார்வதி பால! அமரர் போற்றுங் குமர நாயக! சிறியேன் அறியாது செய்த பெரும் பிழையைப் பொறுத்தருள்க" என்று அடிமலர் மீது வீழ்ந்து துதித்தான்.

பழநியாண்டவர், ''அன்ப! அஞ்சற்க இம்மலையை இங்ஙனமே இருக்கத் தக்கன; குறுமுனியும் ஈண்டு வந்து வழிபடுவானாக, அடியார்கள் அனைவரும் ஈண்டு வந்து வந்தித்து வேண்டுவன பெறுவார்களாக. நீ இம்மலையின் இடைப் பகுதியில் நமக்கு அடியவனாக நிற்பாய்.

உலகில் உள்ளோர் வழிபாட்டிற்குரிய சாதனங்களை உன்போல் காவடியாகக் கொணர்வார்களாக. உன்னை முதலில் வழிபட்டுப் பின்னர் நம்மை வணங்கிய பயனைப் பெறுக. நமது பூரண அருளை நீ பெற்றாய்" என்று திருவருள் புரிந்து நின்றனர். அதுமுதல் பழநி மலைக்கு எண்ணில் காவடிகள் கொணர்ந்து இடும்பனையும், தண்டபாணியாகிய கடம்பனையும் அடியார்கள் என்றும் வழிபட்டு இன்புறு வாராயினர்.



# 'பெருமிழலைக் குறும்பர்'

"பெருமிழலைக்கும் பேயார்க்கும் அடியேன்" என்று சுந்தரர் பெருமிழலைக் குறும்பரையும், காரைக்கால் அம்மையாரையும் போற்றி வணங்குகிறார். பெருமிழலைக் குறும்பர் சுந்தரர் திருநாமமாகிய 'நம்பி ஆரூரர்' என்ற பெயரையே மந்திரச் சொல்லாகக் கொண்டு ஞானலோகத்தில் உயர்ந்து அட்டமா சித்திகளையும் பெற்றவர்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் வெள்ளாற்றின் தென்கரையில் பெருமிழலை இருக்கிறது. இந்த ஊர் புதுக்கோட்டை நகரில் இருந்து வடக்கே சுமார் ஐந்து மைல்களுக்கு அப்பால் இருக்கிறது. இது மிழலை நாட்டின் தலைநகர். இந்த ஊரில் குறும்பர் என்ற செல்வந்தர் இருந்தார். இவர் தூய்மையான சிவபக்தர்.

தம்மைத் தேடிவரும் சிவபக்தர்களுக்கு வேண்டிய எல்லா உதவிகளையும் செய்து வந்தார். சிவன் அடியார்களின் தேவைக்கு ஏற்ப, உணவும், உடையும் கொடுத்து வந்தார். தாராளமாக பொருள் உதவியும் செய்து பெரும் வள்ளலாகவும் விளங்கினார்.

இவர் ஞானயோக சாதனையில் வெற்றி பெற்றவர். ஞானயோக சாதனம் என்பது ஒரு குறிப்பிட்ட மந்திரத்தை ஓதி திருச்சிற்றம்பலம் என்கிற தலையின் உச்சிப் பகுதியில் மனதை நிலைபெறச்செய்வதாகும். திருச்சிற்றம் பலத்தை "தீண்டாதவெளி" என்று ஞானயோகிகள் சொல்கிறார்கள்.

"தீண்டாதவெளியில் வளர் தீண்டாத
தெய்வம்
தீண்டாமணிவிளக்காய் துவங்குகின்ற
தெய்வம்"

என்று திருச்சிற்றம்பலத்தில் இருக்கும் தெய்வத்தைப் போற்றிப் பரவுகிறார் வள்ளலார்.

சுந்தரரிடம் பெரும் ஈடுபாடு கொண்ட குறும்பர் "நமசிவாய" என்ற ஐந்து எழுத்து மந்திரத்தையும் "நம்பி ஆரூரர்" என்று குருநாம மந்திரத்தையும் தாரக மந்திரமாகக் கொண்டு யோகப் பயிற்சியில் ஈடுபட்டு வந்தார்.



"நம்பி ஆரூரர்" என்ற குருநாம மத்திரத்தை ஓதி யோகப்பயிற்சியில் ஈடுபட்டு வந்ததால் அவருக்கு அட்டமா சித்திகளும் கைவரப்பெற்றது.

அட்டமா சித்திகளைப் பெற்றவர்கள் இருந்த இடத்தில் இருந்தே பல இடங்களில் நடந்த நடக்கின்ற –நடக்கப்போகின்ற நிகழ்ச்சிகளை எல்லாம் தெரிந்து கொள்ளும் ஆற்றல் பெற்றவர்களாக விளங்குவார்கள். இந்த நிலைக்கு உயர்ந்தவர்களை "மூவகைக் காலமும் நெறியில் ஆற்றிய அறிவர்" என்று தொல்காப்பியம் அவர்களுக்கு இலக்கணம் சொல்கிறது.

தொல்காப்பியம் குறிப்பிடும்'நெறி' என்பது தான் ஞானயோக நெறியாகும்.

"தெளிவு குருவின் திருமேணி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே!"

என்று குருவின் திருநாமத்தை பக்தியுடன் ஓதி வந்தாலே அட்டமா சித்திகளை எல்லாம் பெறலாம் என்கிறார் சித்தர்களின் தலைவரான ஞானசித்தர் திருமூலர்.

"நம்பி ஆரூரர்" என்ற குருவின் நாமத்தை ஓதி வந்ததன் பலனாகவே அட்டமா சித்திகளை பெற்ற குறும்பர் வழக்கம் போல் யோகப் பயிற்சியில் ஈடுபட்டுவந்தார். அப்போது அஞ்சைக்களத்தில் இருந்து தம்முடைய ஆன்மீகக் குருவான நம்பி ஆரூரர்–சுந்தரர்–கயிலைக்குச் செல்கிறார் என்பதை யோகக் காட்சியில் கண்டார். தம் ஆன்மீகக் குருவைப் பிரிந்து வாழ்வதற்கு குறும்பரால் முடியவில்லை. தம் ஆன்மீகக்குரு கயிலைக்குச் செல்வதற்கு முன்னால் தாம் சென்று அவரை வரவேற்க வேண்டும் என்று தீர்மானித்தார். அடுத்த கணம் தம் ஞானயோகத்தின் மூலமாகத் தம் உடலை ஒளி உடலாக மாற்றினார். சுந்தரருக்கு முன்னால் கயிலைக்குச் சென்றார். தம் ஆன்மீகக் குருவை வரவேற்று இன்பம் அடைந்தார்.

பெரிய புராண நாயன்மார்களின் வரலாற்றில் குறும்பரின் வரலாறு வேறுபட்டதாகும். மற்ற நாயன்மார்கள் எல்லாம் பக்தி மார்க்கத்தின் மூலமாக ஒரு குறிக்கோளை வைத்துக் கொண்டு வாழ்ந்தவர்கள். இதற்கு விதிவிலக்காக யோக மார்க்கத்தைக் கடைபிடித்து வாழ்பவர்கள் குறும்பரும், திருமூலரும் ஆவர்.

புலவர்.க.சுகுமாரன்,எம்,ஏ.பி.எட்,



க்ருதயுகத்தில் நான்முகன் திருமாலைக் காணும் ஆசையில் அசுவமேதயாகம் செய்ய சத்யவ்ரத க்ஷேத்திரமான காஞ்சியைத் தேர்ந்து எடுத்தார். யாகத்தைக் கெடுக்க அசுரர்கள் உலகம் முழுவதையும் இருட்டாக ஆக்கினார்கள். எம்பெருமான் ஒரு பேரொளியாகத் தோன்றி இருட்டைப் போக்கினார். அதனால் அவருக்குத் தீபப்ரகாசர் என்றும் விளக்கொளி பெருமாள் என்றும் பெயர் ஏற்பட்டது. இது நடந்த தலம் திருத்தண்கா எனப்படும்.

ப்ரம்மாவிடம் கோபம் கொண்ட சரஸ்வதி வேகவதி என்கிற ஆறாகப் பெருக்கெடுத்து யாகம் நடத்தும் இடத்திற்குப் பாய்ந்து வந்தபடி இருந்தாள். இதைக்கண்ணுற்ற பெருமாள் வேகவதி வரும் மார்க்கத்தில் வந்து சயனித்தார். சரஸ்வதி வெட்கம் அடைந்து திரும்பிவிட யாகம் இனிது முடிந்தது. அவசரத்தில் பெருமாள் வலமிருந்து இடமாக சயனித்தார், வேகவதிக்கு அணையாக வந்த இடமாததால் வேகவணை, வேகணை வெஃகணை என்று பலவாறாக மருவி திருவெஃகா ஆகியது. திருமழிசை ஆழ்வாரின் சொல்லுக்குக் கட்டுப்பட்டதால் பெருமாளுக்குச் "சொன்ன வண்ணம் செய்த பெருமாள்" என்ற காரணப்பெயர் ஏற்பட்டதாகவும் அப்போது அவசரத்தில் மாறி சயனித்ததாகவும் கூறுவது உண்டு.

# காஞ்சி வரதன்

அக்னியிலிருந்து எழுந்த தேவப்பெருமாளின் முகத்தில் தீப்புண்களின் வடுக்களை இன்றைக்கும் நாம் காண முடிகிறது.

த்ரேதாயுகத்தில் கஜேந்திரன் ஆராதித்ததால் அத்திகிரி என்ற பெயர் ஏற்பட்டது. (ஹத்தி) அத்தி=யானை; கிரி=மலை.

த்வாபர யுகத்தில் பிரஹஸ்பதியும், கலியுகத்தில் ஆதி சேஷனும் ஆராதித்ததாக புராணங்கள் சொல்லுகின்றன.

நகரங்களில் சிறந்தது காஞ்சி என்பதை நகரேஷு காஞ்சி என்பார்கள். மோட்சம் தரும் ஏழு நகரங்களில் காஞ்சியும் ஒன்று என்ற பெருமை பெற்றது.

அத்தகைய சிறப்பு வாய்ந்த காஞ்சியின் அருள்பாலிக்கும் தெய்வங்களான தேவராஜன், பெருந்தேவித் தாயாருக்கு நடத்தும் நவராத்திரி உத்ஸவத்தைப் பார்ப்போம்.

சிவபெருமானுக்கு ஒரு ராத்திரி என்றால் தேவிகளுக்கு ஒன்பது ராத்திரி என்கிற வகையில் நவராத்திரி உத்ஸவங்கள் கொண்டாடப்படுகின்றன. அந்த அந்த ஆலயத்து பெண் தெய்வங்களை கொலு மண்டபத்தில் இருத்தி ஒவ்வொரு நாளுக்கும் ஒவ்வொரு அலங்காரம் வீதம் செய்வித்து பூஜை செய்வது மரபு.

மாறாக காஞ்சியிலோ பெருமாளும் தாயாருடன் இருந்து கொலுவை அலங்கரித்து சேவை கொடுப்பது காஞ்சிக்கே உள்ள மற்றொரு சிறப்பு என்றும் சொல்லலாம் அல்லவா?

புரட்டாசி மாதத்தில் வரும் மஹாளய அமாவாசை அன்று வரதராஜப்பெருமாள் தன் உபய நாச்சிமார்களான ஸ்ரீதேவி, பூதேவியுடன் மலையிலிருந்து கீழே இறங்கி வந்து கண்ணாடி அறை உள்ள மண்டபத்தில் தங்குவார். உத்ஸவம் முடிந்து தசமி அன்று அம்பு போடும் திருவிழா முடிந்தபின்தான் மலைக்குத் திரும்புவார்.

பெருந்தேவித் தாயாரும் கீழே இறங்கி வந்து அந்த ஒன்பது நாட்களும், கண்ணாடி அறையிலேயே தங்குவார். தினமும் காலையில் விசுவரூபதரிசனம் எல்லாருக்கும் கிடைக்கும்.

தினமும் கண்ணாடி அறைக்கு வெளியே உள்ள மண்டபத்தில் நடைபெறும் திரு மஞ்சன சேவையை பக்தர்கள் மண்டபத்திற்கு வெளியே நின்று கொண்டு பாகுபாடின்றி, கட்டணமின்றி தரிசிக்கலாம். பின் தீர்த்தப்ரசாதம், தாயாரின் விரதத்தின் அடையாளமாக மஞ்சள், மாவுப்ப்ரசாதங்களும் வினியோகம் ஆகும்.

சரியாக மாலை 5.30 மணிக்கு இரட்டைப் புறப்பாடு ஆகும். தாயாரை ஒரு தோளுக்கு இனியானிலும், பெருமாள் உபயநாச்சிமார் களை மற்றொரு தோளுக்கினியானிலும் சேர்ந்து சேவை சாதிப்பதை இரட்டைப் புறப்பாடு என்பார்கள்.

சர்வாலங்கார பூஷிதையாக தாயாரும், பெருமாளும் விதம்விதமான ஆபரணங்களை அணிந்தவாறும், தினம் தினம் ஒவ்வொரு பின்னல் அலங்காரத்தில் தாயாரும், விதவித கொண்டை அலங்காரத்தில் பெருமாளும் காட்சி தருவார்கள். புஷ்பஜோடனையைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்.

இருவரும் கண்ணாடி அறையிலிருந்து வெளியே வந்தவுடன் முதலில் உள்ள தாததேசிகன் சன்னிதியில் மரியாதைகளைப் பெற்றுக்கொண்டு பிரதியாக சாமரத்துடன் சடாரி அனுக்ரஹம் செய்துவிட்டு நகருவார்கள். பத்து தப்படிக்கு ஒரு தரம் தெய்வங்களுக்கு கர்ப்பூர ஆரத்தியும் நைவேத்யமும் செய்யப்படும்.

நாதஸ்வர வித்வான்களின் அதி அற்புத நாத இசையில் மக்கள் திளைத்துக் கொண்டிருப்பார்கள்.

தாயாரும் பெருமாளும் முதலில் ஒரு குடை, இரண்டு குடை, மூன்று குடை, என்று 3 குடைகள் நிழலில் வருபவர்கள் நூற்றுக்கால் மண்டபம் சமீபத்ததும் மூன்றும் ஒவ்வொன்றாக விலகிக் கொண்டு, தங்க குடைகளின் நடுவே அவர்களை ஊஞ்சலில் அமர்த்திவிடுவார்கள். நாதஸ்வர லாலி இசையில் திளைத்தபடி சிரம பரிகாரம்



செய்து கொள்வார்கள்.

ஊஞ்சலை ஆட்டியவாறே அவர்களுக்கு தீர்த்த உபசாரம், நைவேத்யம் கண்டருளச் செய்து விட்டு, ஒரு புதுத்துணியை இரண்டு பாகமாக கிழித்து ஒரு பாகத்தைச் சுருட்டி பெருமாளுக்கு திருஷ்டி சுத்தி ஒரு பக்கத்தில் எறிவதை ஒருவர் பிடித்துக் கொண்டு அடி வழியாக மறு பக்கத்திற்கு வந்து அங்கு எறியப்படும் மற்ற பகுதியை பிடித்துக் கொண்டு செல்வார்.

பின் அவர்களை நூற்றுக்கால் மண்டபத்தில் எழுந்தருளப் பண்ணிவிட்டு சுமார் 3 மணி நேரம் பக்தர்களுக்கு அருமையான தரிசனத்தைத் தந்ததுடன் ப்ரசாத வினியோகமும் எல்லாருக்கும் கிடைக்கும்.

இரவு 9 மணிக்கு அதே தோரணையுடன் தெய்வங்கள் கண்ணாடி அறைக்குள் சென்று இளைப்பாறுவார்கள்.


காலை விஸ்வரூபத்திலிருந்து திருமஞ்சனம், புறப்பாடு, சயனம் என்கிற ஒவ்வொரு நிகழ்ச்சி ஆரம்பிக்கும் போதும் வேட்டுப் போடுவார்கள்.

எந்த எந்த நிகழ்ச்சி என்பது பற்றிய விபரங்கள் வேட்டுச் சப்தம் கேட்டவுடனேயே காஞ்சிபுர வாசிகளுக்கு அத்துபடியாகும். அதனால் உடனே தயார் ஆகி ஆண்கள் பஞ்சகச்சத்திலும் பெண்கள் 9கெஜ மடிசார் புடவையிலும் ஆலயத்தை நோக்கி கூட்டம் கூட்டமாகச் சென்று அங்கு குழுமியிருந்து பெருமாளை சேவிக்கும் காட்சி போல வேறு எந்த ஊரிலும் இத்தகைய கட்டுப் பாடான காட்சியைக் காண முடியாது.

இவ்வாறு நவராத்திரி உத்ஸவம், அம்புபோடும் நிகழ்ச்சி கோலாகலமாக நடந்து முடிந்தபின் தெய்வங்கள் அவரவர்கள் சன்னிதிக்குத் திரும்புவார்கள்.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் பெருந்தேவித் தாயார் மாலையில் புறப்பாடு கண்டு துரைமண்டபத்திற்குச் சென்று சற்று இளைப்பாறுவார். அங்கும் எல்லாருக்கும் தீர்த்த, சடாரி, ப்ரசாதம் கிடைக்கும்.

அதேபோல் வரதனும் ஏகாதசி, அமாவாசை, ஸ்வாதி போன்ற நாட்களில் மலையிலிருந்து கீழே இறங்கி வந்து கண்ணாடி அறையில் தங்கி திருமஞ் சனம்



கண்டருளுவார். மாலையில் எதிரில் இருக்கும் (சன்னிதி தெருவில்) சிறிய திருவடி ஆஞ்சநேயர் கோயிலுக்குச் சென்று வருவார். எதேச்சையாக இந்த திதிகள் வெள்ளிக் கிழமைகளில் வந்து விட்டால் இரட்டைப் புறப்பாடு ஆகும். மக்களும் இரட்டிப்பு மகிழ்ச்சியுடன் சேவிக்க ஓடி வருவார்கள்.

இவைகளை அசைபோட்டபடியே இருக்கும்போது தீபாவளித் திருநாள் வந்து விடும். தீபாவளி அன்று இரவு பெருமாள் வீதி உலா கிளம்பி மாட வீதி வலம் வருவார்.

அவரை ஒவ்வொரு முக்கிய இடத்திலும் இருக்க வைத்துவிட்டு வெடிகளை வெடிப்பார்கள் பாருங்கள், வெடிச் சப்தம் காதுகளை உறைய வைத்துவிடும்.

தோரண வெடி, நக்ஷத்திரவெடி, சரவெடி, ஆகாயத்தில் பாய்ந்து பின் நக்ஷத்திரங்களாகவும் தோரணங்களாகவும் கலர் கலராக மாறும் வெடிகள், கலசம் என்றும் அசத்தி விடுவார்கள். வெடித்த பட்டாசுகள் சாலை முழுக்க பாய் விரித்தது போல பரவிக் காணப்படும்.



பெரு மகிழ்ச்சியுடன் வெடிகள் வெடிப்பதைப் பார்த்து ரசித்தபடி பெருமாள் ரொம்ப உற்சாகத்துடன் காட்சி தருவார்.

நவராத்திரி உத்ஸவத்தின் அழகையும் தீபாவளியின் போது நடக்கும் வெடிச் சப்தத்தையும் காண வேண்டுமானால் இப்போதிலிருந்தே திட்டம் போடுங்கள், அடுத்த வருடம் காஞ்சிக்கு உல்லாசப் பயணமாக வருவதற்கு. இடவசதி, நீர்வசதி, சாப்பாடு ஆகியவைகளுக்கு காஞ்சியில் பஞ்சமே கிடையாது.

ஆயிரம் நா படைத்த ஆதிசேஷனால் கூட உத்ஸவ வர்ணனையைப் பூராவும் சொல்ல இயலாது என்று கூடச் சொல்லலாம். நேரில் கண்டுதான் களிக்கவேண்டும். அதற்கு கோடி கண்கள் இருந்தாலும் போதாது என்று சொல்லி முடிக்கின்றேன்.

வாருங்கள், வந்து வரதனின் அருளைப் பெற்று மகிழுங்கள்.

**இந்திரா ஆராவமுதன். ஸ்ரீரங்கம்**



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள், தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு.க.முத்துசாமி, இ.ஆ.ப., மற்றும் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு.ப.ரா.சம்பத், இ.ஆ.ப., ஆகியோருடன் மலேசியா நாட்டில் உள்ள பத்துமலை அருள்மிகு முருகன் திருக்கோயிலுக்கு அலுவல் முறையாக கடந்த *21.12.2009* அன்று நேரில் பார்வையிட சென்றார்.

அத்திருக்கோயிலில் நடைபெறும் நிர்வாக நடைமுறைகள், அங்கு நடைபெறும் பராமரிப்பு பணிகள் மற்றும் திருக்கோயிலில் இயங்கிவரும் கம்பிவட ஊர்தி ஆகியவற்றை நேரில் பார்வையிட்டனர்.

# புளியறை அருள்மிகு தெட்சிணாமூர்த்தி

**பு**ளியறை அருள்மிகு சதாசிவமூர்த்தி, சிவகாமி அம்மையார் கோவிலில் தனி சன்னதியாக வீற்றிருக்கும் குருபகவான் ஸ்ரீதெட்சிணாமூர்த்தி கோவிலின் சிறப்பு இயல்புகளை நாம் இங்கே காண்போம்.

**"நடமாடும் தில்லை வளர் நாதர் சிதம்பரனார் இடமாயிப்புளியில் முளைத்தெழுந்த புண்ணியனே மடமாலையஞ் சிறக்குமா நிலத்திலே யதிகம்" தடம் வாவி சூழ் புளிகைச் சங்கர சதாசிவமே**

**–சங்கர சதாசிவமாலை.**

திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை மலை அடிவாரத்தில் பசுமை எழில் கொஞ்சும் பக்தி பெட்டகமாக திகழ்வது புளியறை தெட்சிணாமூர்த்தி கோவில்.

திருநெல்வேலியிலிருந்து தென்காசி, செங்கோட்டை சென்று அங்கிருந்து வேறு பேருந்துகளில் புளியறையை அடையலாம். செங்கோட்டையிலிருந்து 8கிலோ மீட்டர் தூரத்திலும், திருநெல்வேலியிலிருந்து 67 கிலோ மீட்டர் தூரத்திலும் இவ்வூர் அமைந்துள்ளது. குற்றாலத்திலிருந்து 12கி.மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. வேறு எந்த கோவிலிலும் இல்லாத நிலையில் இங்கு தெட்சிணாமூர்த்தியை வலம் வந்து பக்தர்கள் வணங்கலாம். 27 நட்சத்திரங்களைக் கொண்ட ஆலயம் ஆகும்.




27 நட்சத்திரங்களும் படிகளாக அமைந்துள்ளன. எனவே எந்த நட்சத்திரத்தை சேர்ந்தவராயினும் இந்த திருப்படிகளில் ஏறி தோஷம் நீங்கி குருபகவான் அருள் பெறலாம்.

**ஸ்ரீசதாசிவமூர்த்தி சிவகாமி அம்பாள்**

திருக்குற்றால மலைச் சாரலிலே திருக்குற்றாலத்திற்கு மேற்கே சுமார் 10 மைல் தொலைவில் அமைந்துள்ளதும், கிழக்கில் பச்சை பசேலென பட்டாடை விரித்தாற் போன்ற பசுமையான கழனிகளாலும் மற்ற மூன்று பக்கங்களிலும் நெடிதுயர்ந்த பர்வதங்களாலும் சூழப்பெற்றதும், ஈஸ்வரன் புளியமரத்தின் பொந்திலிருந்து வெளிப்போந்து பக்தர்களுக்கு காட்சி அளித்து வருவதால் புளியறை என்றும் பெயர் பெற்றதுமாகிய அழகிய சிற்றூர்.

முன்பு ஒரு சமயம் பாண்டிய நன்னாட்டிலும் சோழவள நாட்டிலும் சமணர்கள் ஆதிக்கம் வலுத்து, சைவ சமயத்தினர் பிடிக்கப்பட்டிருந்த காலம்! அக்காலத்தில் சிவபக்தர்கள் தங்கள் தெய்வமான நடராஜ பெருமானுக்கு ஏதேனும் தீங்கு நேருமோ என்று அஞ்சி அவரின் திருச்சிலையை எடுத்துக் கொண்டு, சமணர்கள் கண்ணுக்கு புலப்படாத இடத்தில் மறைத்து வைக்கும் கருத்துடன் தென்திசை வந்தனர். பொதிகை மலைக்கும் தெற்கே உள்ள திரிகூடாசலத்தை கடந்து அம்மலைக்கு தென்மேற்கில் சேரநாட்டின் தொடர்ச்சியாய் விளங்கும் மலைச்சாரலில் உள்ள வேணு




வனங்கள் நிறைந்த அப்பிரதேசத்தில், அடர்ந்து நெருங்கிய வானளாவிய வளர்ந்த பெரிய மூங்கிற் பண்ணைகளும், புளிய மரங்களும் நிறைந்து தோன்றின. தாம் கொணர்ந்த விலையிலாப் பொக்கிஷத்தை மறைத்து வைப்பதற்கு இதுவே ஸ்தலமென்று கருதிய பக்தர்கள் அங்கு நின்ற ஒரு பெரிய புளிய மரப்பொந்தில் எம்பெருமானுடைய திருச்சிலையை வைத்து, அப்பொந்தின் வாயிலைக் கற்கள், செடி, கொடி முதலியவைகளால் மறைத்து விட்டு வருத்தமுடன் வடதிசை யேகினர்.

இங்ஙனம் எம்பெருமானுக்கும் அடைக்கலம் அளிக்கும் பாக்கியம் பெற்ற இந்த புளியமரம், அடுத்துள்ள குக்கிராமத்தில் வாழ்ந்து வந்த ஒரு சைவ வேளாளருக்குச் சொந்தமானது. அப்பெரியவர் ஒரு நாள் ஏதேச்சையாக இப்புளிய மரப்பொந்தை உற்று நோக்குங்கால், ஈசனார் இங்கு ஏகாந்தவாசியாய் விளங்குவதைக் கண்டு திகைத்தார். அக்கால இயல்பை நன்குணர்ந்த அச்சிவநேசச் செல்வர், தான் கண்ட ரகசியத்தை யாருக்கும் தெரிவிக்காமல் இருந்ததோடு இந்த புளிய மரத்திற்கு பூஜையும் செய்து வந்தார்.

வருடங்கள் பல உருண்டோடின. சைவ சமய ஆச்சாரியார் பலர் தமிழ்நாட்டில் உதித்தனர். சைவம் புத்துயிர் பெற்றது. தென்திசையில் மங்கி வாடும் நடராஜரின் சிலையை மீண்டும் கைக்கொள்ளும் நோக்கத்துடன் சிவபக்தர்கள் சிலர் தென்திசை நோக்கி நடந்தார்கள். இங்ஙனம் கிளம்பிய பக்தர்கள் பல ஊர்களையும் கால் நடையாகவே கடந்து திரிகூடாசலம் எனும் திருக்குற்றால மலைச்சாரலை அடைந்தனர். பின்னர் கானகம் முழுவதும் தேடியும் நடராஜபெருமான் சிலை அகப்படாமல் அவர்கள் தளர்ந்து நிற்குங்கால், அசரீரியாய் திரிகூடாசலத்திற்கு பஸ்யம திசையில் உள்ள வனம் ஏகுக எனும் தெய்வவாக்கு பிறந்தது. இதை செவி குளிர கேட்டு மட்டிலா மகிழ்ச்சி கொண்ட பக்தர்களுக்கு அடர்ந்த காட்டிலிருந்து வேணு வனம் செல்லும் பாதை தெரியவில்லை. செய்வதறியாது மனம் கலங்கி நிற்கும் போது, சாரை சாரையாய்ச் செல்லும் எறும்புத் தொடரை பின்பற்றுக என்று அசரீரீ கேட்க, அவர்கள் அவ்விதமே பின்தொடர்ந்து திரிகூடாசலத்திற்கு மேற்கே உள்ள



வேணுவனம் அடைந்தனர். எம்பெருமான் அடைக்கலம் புகுந்த புனித புளியமரத்தை அவர்கள் கண்டனர். தாம் தேடி வந்த பொருள் கிடைத்திடவே அவர்கள் பயபக்தியுடன் இறைவன் சிலையை எடுத்துக் கொண்டு திரும்பினார்கள்.

சில நாட்கள் கழித்து மேற்கூறிய சைவ வேளாளர் வழக்கம் போல தமது புளிய மரத்தை தரிசிக்கப் போனார். ஆனால் அந்த மரப்பொந்தில் நடராஜ பெருமானின் சிலையை காணவில்லை. அந்த சிலை இருந்த இடத்தில் சிறியதொரு சிவலிங்கம் பூமியை பிளந்து கொண்டு வெளியே தோன்றி நின்றது. அக்காட்சியை கண்டு அளவிலா ஆச்சரியமும் ஆனந்தமும் கொண்டு பரவசமாயினர். இது பற்றிய செய்தி ஊரெங்கும் பரவ மக்கள் திரள் திரளாக வந்து இறைவனை வணங்கினர். இச்சம்பவங்கள் நடந்த காலத்தில் இவ்வூரை அச்சன்குன்றன் என்ற ஒரு சிற்றரசன் சேரன் ஆணைக்குட்பட்டு அரசு செலுத்தி வந்தான். புளியமரத்தில் நடந்த இறைவன் திருவிளையாடல் பற்றிய செய்தி மன்னனுக்கு எட்டவே, அவனும் அங்கு விஜயம் செய்து இறைவன் தோன்றிய இடத்தில் அழகிய திருக்கோவில் ஒன்றை நிறுவினார்.

மேற்கூறியவாறு சுயம்புவாக முளைத்த எம்பெருமான் இத்திருக்கோவிலில் சதாசிவமூர்த்தி எனும் திருநாமந் தாங்கி சர்வஜெகன் மாதா சிவகாமி சமேதராய் பக்த கோடிகளுக்கு தன் அன்பையும் அருளையும் பொழியும் வள்ளலாக விளங்குகின்றார். ஆறுகால பூஜையுள்ள இக்கோவிலில் வைதீக முறைப்படி பூஜைகள் ருக்வேதங்கள் பின்பற்றப்படுகின்றன. கோவில் முகப்பில் சடாமகுடதீர்த்தம் என்னும் அழகிய புஷ்கரணி உள்ளது. இத்திருத்தலத்தில் தட்சணாமூர்த்தி தனி சன்னதியில் அமர்ந்து பக்தர்களுக்கு அருள்பாலித்து வருவது தனிசிறப்பாகும். வியாழக்கிழமை அன்று இவரை அர்ச்சனை செய்து வழிபட்டால் நினைத்த காரியம் கைகூடுகிறது.

குருபகவான் துதி:

மறைமிகு கலைநூல் வல்லோன்
வானவர்க்கரசன் மந்திரி
நறைசொரி கற்பகம் பொன்
னாட்டினுக் கதிபனாகி
நிறை தனம் சிவிகை மண்ணில் நீடு
போகத்தை நல்கும்
இறையவன் குரு வியாழன் இரு மலர்
பாதம் போற்றி

தெட்சணாமூர்த்திக்கு எதிரே தென்புறம் ஒரு வாலி இயற்கையாக அமைந்துள்ளது. தெட்சிணாமூர்த்தியின் பாதத்தில் ஓரே சதுரக் கல்லில் ஒன்பது ஆவர்த்த பீடம், கட்டங்கள் வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. இது ஒரு தனிச்சிறப்பு. இத்தகைய வடிவில் அமைந்த கோவிலில் வழிபடும் பக்தர்கள் குறை தீர, வழி வகுப்பதோடு அவர்களின் வருங்காலமும், வளமோடு அமைய வரமளிக்கின்றது. சுற்றுப் பிரகாரத்தில் ஒன்பது கன்னிமார் நதிகளாக இருந்து பக்தர்களின் பாவத்தை போக்குவதாக நம்பப்படுகின்றது. மாடன், மாடத்தி, எஜ்ஜியம்மான், சந்திரன் மற்றும் சனி பகவானுடைய தனி சன்னிதி பைரவர் சன்னதிகளும் அமைந்துள்ளன. கன்னி விநாயகர், பாலசுப்பிரமணியர் சன்னதிகளும் சுற்றுப் பிரகாரத்தில் உள்ளன.

சிதம்பர ரகசியத்தை ஒளித்து வைத்த இடம் இந்த புளியறை. இங்கு சதாசிவ மூர்த்தியும், சிவகாமி அம்பாளும் கிழக்கு முகமாக வீற்றிருந்து அருள் பாலித்து வருகிறார்கள். இவ்வாலயத்தை தரிசித்தால் சிதம்பரத்தில் உள்ள கோவிலை தரிசித்தமைக்கு இணையான புண்ணியம் கிடைக்கும்.

கிரக தோஷங்கள் உடையவர்கள் இந்த ஆலயத்திற்கு வியாழக்கிழமைதோறும் வந்து தரிசனம் செய்தால் நல்ல பலன் கிடைக்கும். தாலிபாக்கியம் கிட்டும். தாரதோஷம் நிவர்த்தியாகும். உடல் ஆரோக்கியம், தொழில் வளம், விவசாய நற்பலன்கள் மற்றும் சௌ பாக்கியங்களும் வாய்க்கப் பெறுவார்கள்.

இவ்வாலயத்தில் குருவாரம் தோறும் படி பூஜை செய்து குரு வழிபாடு செய்தால் சகல பாக்கியங்களும் கிடைக்கும். ஒரே தீபாராதனையில் சுவாமி தெட்சிணாமூர்த்தி, நந்தீகேசுவரர், சதாசிவமூர்த்தி ஆகிய மூன்று தெய்வங்களையும் தரிசனம் செய்ய முடிகின்ற ஒரே ஆலயம் இதுதான். குரு பகவானுக்கு கட்டுப்பட்டு அனைத்து கிரகங்களும் இங்கு இருப்பதாக ஐதீகம். பக்தர்களுக்கு அருள் பாலிப்பதாக அமையும். இவ்வாலயத்தின் முன்பு கீழ்புறம் சடாமகுட தீர்த்தம் உள்ளது. மனிதன் செய்த பாவங்கள் நீங்கி மன்னிப்பு பெறுவதற்கு இந்த தீர்த்தத்தில் நீராடினால் போதும். இது ஒரு பொற்றாமரை தீர்த்தமாகும்.

**குருபெயர்ச்சி விழா**

இவ்வாலயத்தில் தைமாதத்தில் "திருக்கல்யாணம்" 10 நாள் திருவிழாவாகவும், குருபகவான் ராசிமாறும் "குருபெயர்ச்சி விழா" வருடத்தில் 1 முறையும் சிறப்பாக நடைபெறும். குருபெயர்ச்சி விழா அன்று தமிழகம் மட்டும் அல்லாது மற்ற மாநிலங் களிலிருந்தும் இலட்சோப இலட்சம் பக்தர்கள் தரிசனம் செய்யவருவார்கள். மேலும் மாசி மாதத்தில் வரும் சிவராத்திரிவிழா சிறப்பாக கொண்டாடப் பட்டு வருகின்றது.

குருபகவானை வியாழ பகவான் என்றும் பிரிஹஸ்பதி பகவான் என்றும் அழைப் பதுண்டு. தேவர்களின் குருவாக விளங்கிய காரணத்தால் குருவென்ற பெயரும் நுண்ணறிவு மிகப்படைத்து, கல்வி கேள்வி களில் சிறந்தவர் என்று கருதப்படுவதால் பிரகஸ்பதி என்ற பெயரும் இப்பகவானுக்கு அமைந்தன. இப்பகவான் இறைவனை பூசித்த ஸ்தலங்களுள் மூன்று குறிப்பிடத்தக்கவை. அவை 1.தென்குடித் திட்டை 2. திருவாலிதாயம் 3.திருச்செந்தூர்

**1.தென்குடித்திட்டை**

தஞ்சையிலிருந்து மாயவரம் செல்லும் இருப்பு பாதையில் ஒன்பது கிலோமீட்டர் தொலைவில் திட்டை என்ற ஒரு ரயில் நிலையம் உள்ளது. அது தேவார பதிகம் பெற்ற திருத்தலம். இத்தலத்து மூர்த்தியின் பெயர் ஸ்ரீ பசுமதி நாதர். அம்பிகையின் பெயர் ஸ்ரீ உலக நாயகி. இத்தலத்து மூர்த்தியைக் கௌதமர், ஆதிசேஷன், காமதேனு, குரு முதலியோர் பூஜித்து பெயர் பெற்றனர் என்று சொல்லப்படுகிறது.

**2.திருவாலிதாயம்**

சென்னைக்குப் பக்கத்தில் 12 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இத்திருத்தலம். இதற்கு பாடி என்று ஒரு பெயரும் உண்டு. இத்தலத்தில் கோயில் கொண்டு எழுந்து அருளிய ஈசனார் பெயர் ஸ்ரீவலிதாயநாதர் அம்பிகையின் பெயர் ஸ்ரீ தாயம்மை இத் தலமும் தேவாரப் பாடல் பெற்ற திருத்தலம்.

**3.திருச்செந்தூர்**

குருபகவான் பூசித்த மற்றொரு முக்கிய திருத்தலம் திருச்செந்தூர். முருகப் பெருமானின் அறுபடைவீடுகளில் இதுவும் ஒன்று. இதற்கு நக்கீரர் தம்முடைய திருமுருகாற்றுப்படையில் வழங்கும் திருப்பெயர் திருச்சீரலைவாய் இத்திருத்தலத்து முருகனை கந்தபுராணம்

**சூரலை வாயிடைத் தொலைத்து**
**மார்புகீண்டு**
**ஈரலை வாயிடும் எஃகம் ஏந்தியே**
**வேரலை வாய்தரு வெள்ளி**
**வெற்பொரீ இச்**
**சீரலை வாய்வரு சேயை போற்றுவோம்.**

என்று போற்றுகிறது.




**புளியறை செல்வோமே!**
**குருவின் அருள் பெறுவோமே!!**

# கண்டேன் கமல மலர்ப்பாதம் (கோயில் திருவாய்மொழி)

நாமவனிவனுவன்
அவளிவளுவளெவள்
தாமவரிவருவர் அதுவிதுவுதுவெது
வீமவையிவையுவை அவைநலம்
தீங்கவை
ஆமவையாயவை ஆய்நின்றவவரே

## எல்லாம் இறைவனே

'**நா**ம்' என்ற பெயர்ப் பொருளும், 'அவன் இவன் உவன்' எனும் ஆண்பால் பெயர்ப் பொருளும், 'அவள் இவள் உவள்' எனும் பெண் பால் பெயர்ப் பொருளும், 'அது, இது, உது, எது' எனும் ஒன்றன் பால் பெயர்ப் பொருள்களும் அழிகின்ற அந்த பொருள்களும், நல்ல பொருள்களும், தீய பொருள்களும் உண்டாகும், உண்டான பொருள்களும் ஆகி நிற்கின்ற எல்லாப் பொருள்களும் இறைவனே.



முன் பாட்டில் அனுபவித்த லீலா விபூதியையே (பூலோகம்) இந்தப் பாட்டிலும், இனி வரும் பாட்டுகளிலும் அனுபவிப்போம். ஏனெனில், ஆழ்வார் சம்சாரிகளுக்குச் சொல்ல வேண்டியுள்ளது, இவ்வுலகம் இறைவனுக்கு உடைமை என்று. உலகில் காணப்படும் பொருள்கள் அனைத்தும் இறைவனுக்கு உரிமைப்பட்டவை. எப்படி? படைத்து, உண்டாக்கிய உயிர்களுள் புகுந்து, அவற்றிற்கு பொருள் ஆகை, பெயர் பெறுகை என்னும் இவை உண்டாகும்படி செய்து, இவை முற்றும் அழிந்த அன்று, கண்களுக்குத் தோன்றாதபடி மிக நுண்ணிய உருவத்தோடு தன் பக்கலில் கிடக்கும்படி இவற்றைத் தடுத்து, காரண நிலையோடு, காரிய நிலையோடு இருப்பதால், அவை அவன் (ஆட்சிக்குப்பட்டது) என்று தெரிகிறது.

உடல், உடலை விரும்பி

நிற்கின்ற உயிர், உயிருக்குள் தங்கி இருக்கின்ற இறைவன் ஆகியவைகளுக்கு ஐக்கியம் அருளிச் செய்கிறார்.

ஆக, ஆண்பால், பெண்பால், ஒன்றன் பால் என்னும் பேதத்தாலும், மதிக்கத்தக்க பொருள், அழியும் பொருள் என்னும் பேதத்தாலும், நலம் தீங்கவை என்னும் பேதத்தாலும், மூன்று கால பேதத்தால் வந்த விசேடங்களாலும், அறிவுடைப் பொருள் அறிவில்லாப் பொருள் ஆகிய எல்லாப் பொருள்களையும் தொகுத்து, அவற்றினுடைய தன்மை இறைவனுக்கு அறிவிக்கப்படுகிறது.

**(5)**

**அவரவர் தமதமது அறிவறிவகைவகை**
**அவரவரிறையவர் எனவடியடைவர்கள்**
**அவரவரிறையவர் குறைவிலரிறையவர்**
**அவரவர் விதிவழி அடையநின்றனரே**

## காப்பவன் அவனே

உலகமும், உள்ள பொருட்களும், உயிர்களும் அவனுக்கு உரிமைப்பட்டவை என முன் பாசுரத்தில் அருளினார்.

அதேபோன்று, காத்தல் தொழிலும் அவனுக்கு உரிமைப்பட்டது என்கிறார் இதில்.

முக்குணங்களின் வசப்பட்ட மக்களின் அறிவும், அறியும் தன்மைகள் அவரவர் குணங்களுக்குத் தக்கபடி வெவ்வேறானவை. அவர்கள் நம்பிக்கைகளும், வணங்கும் தெய்வங்களும் வெவ்வேறாக இருக்க, அவரவர்கள் அந்தந்தத் தெய்வங்களையே பற்றுக் கோடாக அடைவார்கள். அவர்களால் அடையப்பட்ட அந்தத் தெய்வங்களும் இறையவர் என்று கூறப்படுவதற்கு எந்தவிதமான குறையும் இன்றி இருக்கின்றனர். காரணம் என்ன? அந்தத் தெய்வங்கள் தங்கள் ஆகமங்களில் விதித்து வைத்த வழியால் அவர்களை வணங்குகிற மக்கள் தாம் தாம் விரும்பிய பலனைப் பெறும்படியாக அத்தேவர்களுடைய உயிருக்குள் உயிராய் நின்று காக்கும் தெய்வமாகிய எம்பெருமான் திருவருள் புரிவதாலே.

**முனைவர் டி.எஸ். ராமசுவாமி**

செல்வங்களைச் சேர்க்கின்ற தன்மையிலும், ஆபத்துக்களைப் போக்கும் தன்மையிலும் புருடோத்தமனாகிய இறைவனைத் தவிர, ஆற்றலுடைய வேறு ஒருவன் காணப்படுகிறான் இலன்' என்றும்,

'காப்பாற்றுகிற திறன் விஷ்ணுவைத் தவிர வேறு ஒருவர்க்கும் அன்று' (விஷ்ணு புராணம்) என்று பிரமாணங்கள் இருப்பதால், எல்லா நன்மைகளையும் செய்ய வல்லவனாய், பகையையும் போக்க வல்லவனாய் சர்வேச்வரனான எம்பெருமான் எல்லோர்க்கும் உள் உயிராய், அந்தர்யாமியாய் நின்று நடத்துவதால் எல்லோரும், எந்தப் பேதமும் இன்றி காப்பாற்றப்படுபவர்கள் ஆகிறார்கள்.


வேதங்களைத் தொடங்கும் போதும், முடிக்கும் போதும் கூறப்படுகின்ற 'ஓம்' என்ற பிரணவத்துக்குள் மறைந்துள்ளது 'அ'கரம். அது காக்கும் இறைவனைக் காட்டுகிறது. அதற்குப் பொருளாக உள்ளவன் யார்? அவனே சர்வேச்வரன் (எம்பெருமான்) என்று உபநிடதங்கள் கூறுகிறது.

ஒரே பலனை அடையப் பல வழிகள். குணபேதங்கள், அதனால் அறிவு பேதங்கள், சுவை வேறுபாடுகள் மக்களிடம் உள்ளன. முக்குணங்களில், சத்வகுணம் மிக உயர்ந்தது; இராஜஸ குணம் மத்திமம், தாமச குணம் கீழானது. முக்குணக் கலவை ஒவ்வொரு வருக்கும் இருந்தாலும், எந்தக் குணம் விஞ்சி இருக்குமோ அப்படியே சுவையும் அமைகிறது. கொள்கைகள், நம்பிக்கைகள் தேவதைகள் வேறுபாடுகளும் சுவையினால் ஏற்படும் அறிவைப் பொறுத்தே அமையும்.

'எவன் எவன் பக்தியுள்ளவனாகி, எந்தெந்த தேவர்களை வணங்க விரும்புகிறானோ, அவன் அவனுக்கு அந்தந்தத் தேவர்களை வணங்க உரிய பக்தியை நான் கொடுக்கிறேன்'. (பகவத் கீதை – 7–21)

''அவன் அவன் அந்தப் பக்தியோடு அத்தேவர்களை ஆராதனை செய்கிறான், என்னால் கொடுக்கப்பட்ட பலனையும் அடைகிறான்.'' (பகவத் கீதை –7–22)

"இராமடம் ஊட்டல்" என்பர். அதாவது, தாயிடம் கோபித்துக்



கொண்டு சாப்பிடாமல் வெளியே சென்ற குழந்தை அருகே இருந்த சத்திரத்தில் போய் பசியுடன் படுத்துக் கொண்டது; தாய் உணவு எடுத்துச் சென்று, குழந்தைக்குத் தெரியாமல் சத்திரக்காரனிடம் கொடுத்து ஊட்டச் சொல்ல, குழந்தையும் தன் பசியைப் போக்கிக் கொண்டதாம். எம்பெருமான் தன்னை வணங்குபவர்க்கு மட்டுமல்லாமல், ஏனைய தெய்வங்களை வணங்குபவர்களுக்கும் அந்தத் தெய்வங்களுக்கு உள் உறைபவனாக இருந்து உதவுகிறான் என்பது கொள்கை.

எங்கள் தெய்வமாகிய எம்பெருமானை வணங்காமல், ஏனைய தெய்வங்களை வணங்குபவர்களையோ, அந்தத் தெய்வங்களையோ வெறுக்காமல், ஒதுக்காமல், எல்லோரும் எம்பெருமானாலே காக்கப்படுகிறார்கள் என்ற உயரிய நம்பிக்கை நல்லிணக்கத்தின் தனிச் சிறப்பு.

ஆகவே தான், சமய நல்லிணக்கத்திற்கும், ஒருங்கிணைந்த சமுதாய அமைப்பிற்கும், இந்த நம்பிக்கையே அடித்தளமாக அமைகிறது.

**(6)**

**நின்றனர் இருந்தனர் கிடந்தனர்**
**திரிந்தனர்**
**நின்றிலர் இருந்திலர் கிடந்திலர்**
**திரிந்திலர்**
**என்றுமோர் இயல்வினர் என**
**நினைவரியவர்**
**என்றும் ஓரியல்வோடு**
**நின்றவெந்திடரே**

**<u>மாறுபட்ட நிலை உடையவன்; அருள் உடையவன்</u>**

"நிற்றல், நில்லாமை, இருத்தல், இராமை; கிடத்தல், கிடவாமை, திரிதல், திரியாமை" எனும் ஒன்றுக்கு ஒன்று மாறுபட்ட நிலை உடையவன் எம்பெருமான்.

ஆகவே, அவன் எப்போதும் ஒரே தன்மை உடையவன் என நினைக்க முடியாதவன். அந்தத் தன்மை எப்போதும் மாறுபடாமல் ஒரே நிலையுடன் இருப்பவன்.



வேதங்களால் பரம்பொருள் இவனே என்று உறுதி செய்யப்பட்ட திடமான அந்த இறைவன் என் தலைவன் ஆவான்.

முன் பாசுரத்தில், உலகங்களைக் காத்தல் இறைவன் சங்கல்பத்தால் (நினைத்தவுடன்) நடப்பதால், அந்தக் காத்தல் அவன் நினைவின் கட்டுப்பாடு என்றார். இந்தப் பாசுரத்தில், அந்தக் காத்தல் செய்தல், செய்யாமை இறைவன் நினைவின் செயல் என்கிறார்.

அதாவது, தொழில் செய்தல், செய்யாமைகளைக் காட்டுகின்ற 'நின்றனர்' முதலிய சொற்கள், அவற்றின் நிலைக்களமான உயிர்களைக் காட்டி, அந்த உயிர்கள் இறைவனைப் பிரிந்து இருக்கும் தன்மை இல்லாததால், இச்சொற்கள் இறைவனைக் குறிக்கின்றன.

'அப்படியானால், தொழில் செய்ய, இறைவன் திருவருள் வேண்டும்; தொழில் செய்யாமல் இருக்கவும் அவன் அருள் வேண்டுமோ?' என்ற கேள்விக்கு எம்பார் 'சுவர்க்கத்திலிருந்து வேகமாக கீழே பூமிக்கு விழுந்து கொண்டிருந்த திரிசங்கு என்பவனை அவன் விரும்பியபடி சத்திமான் என்ற முனிவர் (விசுவாமித்திரர்) பாதி வழியில் அப்படியே நிற்கும்படி செய்தாரே. ஆகவே விழுதல் எனும் தொழில் நிவர்த்திக்கும் அவன் அருள் வேண்டியிருந்தது' என்றார். ஆகவே, விழுதல் என்ற தொழில் நிகழாமை, திரிசங்குவால் முடியவில்லை; அவன் திருவருள் நிற்க வைத்தது.

காலம் உள்ளவரை ஆராய்ந்தாலும், இறைவன் இப்படிப்பட்ட ஓர் தன்மை உடையவன் என்று நினைக்கவும் முடியாது. அதுவே அவன் தன்மை. அந்தத் தன்மை, மனிதர்களால் இயற்றப்படாத எம்பெருமான் படைத்த வேதங்களால் உறுதி செய்யப்பட்டது. அப்படிப்பட்ட இறைவன் நிலை நமக்கு பயனுடையதாக உள்ளதால் "எம்திடரே" என்றார். உலகெங்கும் காலம் காலமாக தோன்றிய அறிஞர்களின் சிந்தனைகளிலிருந்து உதிர்ந்த கருத்துக்கள் பல மதங்களாக, பல பிரிவுகளாகவும் அவைகளைச் சார்ந்த கூட்டங்களாகவும் பிரிந்திருந்தாலும், எல்லோரும் இறைவனின் அருள் என்னும் அந்த பலனுக்காக ஒன்றுபட்டே பிரார்த்தனை செய்து கொண்டிருக்கின்றனர். அதுவே 'எம் திடர்'.—

# போப்பையரும் பொங்கலும்

பேராசிரியர் முனைவர் ச. கணபதிராமன்

'**யா**தும் ஊரே யாவரும் கேளிர்' என்ற கோட்பாட்டையுடையவர்கள் தமிழர்கள் உலகமெல்லாம் ஒரு தாய் மக்களாக வாழ வேண்டும் என்ற உயர்ந்த சிந்தனையுடைய தமிழர்களின் இலக்கியங்கள் அனைத்துமே உலக சிந்தனையை அடிப்படையாகக் கொண்டு எழுந்தவையே. இச்சிந்தனைக்கு நீரூற்றி வளர்த்த பெருமை தேனினும் இனிய செந்தமிழ் மொழிக்கு உண்டு. தென்னாட்டு மொழியானத் தீஞ்சுவைத் தமிழ் மொழி. இந்நாட்டில் வாழ்ந்த எல்லாச் சமயத்தாருக்கும் உரிய செம்மொழியாக இலங்கியது. தமிழ் நாட்டில் பிறந்த சமயங்களும், வந்து வளர்ந்த சமயங்களும், அமிழ்தினும் இனிய தமிழ் மொழியைத் தலையால் தாங்கி நாவாரப் போற்றி வளர்த்தன. சைவரும், வைணவரும், சமணரும், சாக்கியரும், முகமதியரும், கிறித்தவரும் தமிழன்னைக்கு இலக்கியங்களான அணிகலன்களை அணிவித்து மகிழ்ந்தனர். தமிழன்னையின் செம்புகழினை உலகெலாம் பரப்பி இன்புற்றனர். இவ்வாறு இன்புற்ற தமிழ்த் தொண்டர்களுள் டாக்டர் ஜீ.யு.போப் அவர்களும் ஒருவர். டாக்டர் போப் அவர்கள் தமிழன்னைக்குச் செய்த தொண்டு, வெள்ளிப் பேழைக்குள், மாணிக்கக் கற்களைப் பதித்தாற் போன்றதாகும்.

### சாயர்புரம்

இங்கிலாந்து நாட்டில் பிறந்த, டாக்டர் ஜீ.யு.போப் இந்திய நாட்டின் தென் கோடியிலிருக்கும், நெல்லை நாட்டில், சாயர்புரம் என்னும் சிற்றூரில் தங்கி, கிறித்தவப் போதகராகத் தொண்டு செய்யலுற்றார். அப்போது செந்தமிழ் நாட்டின் செழுந்தமிழ் மொழியின் சீர்மையினையும் நீர்மையினையும் கண்டு நெஞ்சம் தழைத்தார். தமிழ் மொழியினைக் கசடறக் கற்க வேண்டுமெனத் தக்க புலவர்களைக் கொண்டு கற்றுத் தெளிந்தார். திருக்குறளின் தெள்ளிய நயமும் சிந்தாமணியின் செழுஞ் சுவையும் கம்பராமாயணத்தின் கவியின்பமும், அவர் மனத்தைக் கவர்ந்தன. புறநானூற்றுப் பாடல்களில் நலங்களும், நீதி நூல்களின் அறங்களும் இலக்கண நூல்களின் இயல்பும் இவரது நெஞ்சினை ஈர்த்தன. இவ்இலக்கியங்களை உலகமறியச் செய்ய வேண்டுமென உயர்ந்த நோக்கம் கொண்டு, தான் வந்த மத போதகப் பணியினையும் மறந்து தொண்டாற்றத் தொடங்கினார். போப் அவர்களின் தமிழ் தொண்டினுள் தலையாயது அவரது மொழி பெயர்ப்புத் தொண்டே எனலாம்.

### திருக்குறள்


தமிழ் மொழியின் தலையாய நூலான திருக்குறளின் அமைப்பும், கருத்தும் இவரது நெஞ்சத்தைப் பெரிதும் கவர்ந்ததால் அதனை ஆங்கிலத்தில் ஆர்வமுடன் மொழி பெயர்த்தார். மொழி பெயர்ப்பின் முன்னுரையில் திருக்குறள் உலகப் பேரிலக்கியங்களுள் ஒன்று என்று குறிப்பிட்டுள்ளார். ஆலும் வேலும் பல்லுக்குறுதி நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி என்பது தமிழ் நாட்டார் பழமொழி. இரண்டு என்பது இரண்டு வரிகளைக் கொண்ட திருக்குறளையும் நாலு என்பது நான்கு வரிகளைக் கொண்ட நாலடியாரையம் குறிக்கும். இவ்விரண்டு நூல்களும் தமிழ்மொழியின் தலையாய நூல்கள். திருக்குறளை



ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த போப், திருக்குறளைப் போன்று உலக மக்களுக்கு ஒழுக்கத்தைக் கற்பிக்கும் நாலடியாரையும் மொழி பெயர்த்தார். தமிழ் மொழியில் உள்ள நீதி நூல்கள் அனைத்தையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்க எண்ணிய டாக்டர் போப் அவைகளைக் கற்றுப் பழுத்த புலமையும் பெற்றார். பள்ளிச் சிறுவர்கள் முதல் பரிபக்குவம் அடைந்த பெரியோர்கள் ஈறாக எல்லோருக்கும் பயன்படத்தக்க முறையில் தமிழ் மொழியில் நீதி நூல்கள் அமைந்திருப்பதைக் கண்டு மனம் களித்தார். ஐந்து வயதில் பள்ளிக்குச் செல்லும் சிறுவர் 'அறஞ்செய விரும்பு' 'ஆறுவது சினம்' என்று ஓதுகின்றார்கள். ஆறறிவு வளர வளர நாலடியாரையும் திருக்குறளையும் நுணுகி நுணுகி ஆராய்கிறார்கள். இம்முறை ஞாலமெலாம் பரவிட வேண்டுமென்ற நோக்கத்தோடு. பள்ளிச் சிறுவர்களுக்குப் பயன்படும் நீதிநூல்களையும் ஆங்கில மொழியில் மொழி பெயர்த்தார்.

**திருவாசகம்**

டாக்டர் போப் பிறப்பால் கிறித்தவராக இருப்பினும். கிறித்தவ சமயப் போதகராகத் தமிழ் நாட்டிற்கு வந்திருப்பினும் சமயப் பொறையோடு வாழ்ந்து வந்தார். கல்லைப் பிசைந்து கனியாக்கி இறைவனது. பெருங் கருணையையும். ஊனினைச் சுருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்த மயமான ஒளியினையும், நறை பழுத்த துறை தீந்தமிழின் ஒழுகு நறுஞ் சுவையினையும், திருவாசகத்தில் கண்டு நெஞ்சம் நெகிழ்ந்து அதனையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். சிவன் என்னும் நாமத்தினை தனக்கே கொண்ட செம்மேனி எம்மானின் சீர்மையினைச் செப்பும் திருவாசக மொழி பெயர்ப்பின் முன்னுரையில் இவர் சைவ சமயத்தின் தொன்மையினையும் செழுமையினையும் குறிப்பிட்டுச் சொல்கிறார். ஆங்கில நாட்டிலிருந்து வருகின்ற மக்கள் இந்நூலினை அவசியம் கற்க வேண்டும் என்று அறிவுறுத்துகிறார். தென்னிந்திய மக்களின் சித்தாந்தமும், திருக்கோயில் வழிபாடும் பாராட்டுதற்குரியவை என்று பாராட்டுகின்றார். திருமந்திரம், தேவாரம், திருவிசைப்பா, பட்டினத்தடிகள் பாடல்கள், தாயுமானவர் பாடல்கள் அனைத்தும் உண்மையின் ஒளியாய் ஒளிர்பவை என்று உரைக்கின்றார். இவரது, திருவாசக மொழி பெயர்ப்பினை, ஜூலியன் வில்சன் என்னும் அறிஞர், "இருவினை கடந்த செல்வன் இசைத்த வாசகத்தையெல்லாம், வரும் விளையாட்டாற் போலும் மறுமொழி அதனில் வைத்தோன்" என்று பாராட்டுகின்றார். சரவணக் கவிராயர் என்னும் பெரும் புலவர்.



**"தெய்வத் தமிழ் மறையைச் செய்ய**
**மெய்ப் பொருளைச்**
**செந்தமிழ்ப் பயிலா மாந்தர்**
**நன்குணரத்**
**தீங்கில தாகிய ஆங்கில மொழியில்**
**பெயர்த்தினி தளித்துப் பேரிசை**
**நிறுவினன்**
**அன்னபேர் அறிஞன் யாரெனிற்**
**கூறுதும்**
**ஆங்கில நாட்டுக்கு அணியென உதித்து**
**அருந்தமிழ் அணங்கைத் திருந்திய**
**செவிலித்**
**தாயென வளர்க்கும் நேயமிக்**
**குடையோன்**
**கிறித்தவ சமயக் குருத்துவ சீலன்**
**போப் பென்னும் நாமம் புனைந்த**
**நாவலனே"**

என்று வியந்து பாடுகின்றார்.

**ஆனந்தக் கண்ணீர்**

டாக்டர் போப் திருவாசகத்தை, இங்கிலாந்து நாட்டில் ஓய்வு பெற்று இருக்கும்போது மொழி பெயர்க்க முயன்றார். நரை திரை வந்து மூப்புற்ற நிலையில் இச்செயலைச் செய்ய எண்ணிய போப் அய்யர் இதனை முடிக்க முடியுமா என்று ஐயம் கொண்டு பாலியல் கலாசாலைத் தலைவரிடம் கூற, அதற்கு அவர், "தமிழ்ப் பெரும, ஓர் அரும்பெரும் வேலையைத் தொடங்கி நடத்துவது தான் நெடுகாலம்

வாழ்வதற்கு உரியது. அவ்வேலை முடியும் வரை, உயிர் இருந்தே தீரும்" என்று கூற இச்சொல்லைத் தாரக மந்திரமாகக் கொண்டு. டாக்டர் போப் மொழி பெயர்த்து. தமது எண்பதாவது வயதில் வெளியிட்டார். இப்பெரும் பணியினை அவர் நிறைவேற்றிய போது நெஞ்சம் நிறைந்த இன்பத்தால் நிமலனை நினைத்து கசிந்து கண்ணீர் மல்கி நா தளதளக்க, திருவாசகத்தைப் பாடிக் காட்டினார்.

**புறநானூறு**

காலத்தையும் கோலத்தையும் கடந்து நிற்பவன் இறைவன் என்பதை உணர்ந்த போப் தமிழர்களின் தொன்மையான நாகரிகச் சிறப்பினை உலகிற்குக் காட்டும் வண்ணம், அமைந்துள்ள புறநானூற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். டாக்டர் போப்பையர், தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே சாமிநாதையர வர்களுக்குத் தமது புறநானூற்று மொழி பெயர்ப்பினைப் பற்றிக் குறிப்பிட்டு எழுதும் போது "பாரி, அவன் மகளிர், கபிலர், கோப் பெருஞ்சோழன், பிசிராந்தையார், பொத்தியார் முதலியவர்களைப் பற்றிக் கட்டுரை எழுதிக் கொண்டிருக்கிறேன். இன்னும் கர்ண பரம்பரைச் செய்திகள் வேண்டும் 115 முதல் 120 ஆம் பாட்டுக்கள் என்னைப் பெரிதும் கவர்கின்றன' என்று எழுதுகின்றார். இவ்வாசகங்கள் போப்பையரின் தமிழ் நெஞ்சினைப் புலப்படுத்துகின்றனவன்றோ?

**காப்பியங்கள்**

ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான மணிமேகலைக் கதையினையும் இவர் ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். செந்தமிழ்ச் சுவையினை அள்ளித்தரும் சிந்தாமணியை உ.வே, சாமிநாத ஐயரவர்கள் வெளியிட்டதும், அதனைக் கற்ற போப்பையார், அதன் நடையினை அறிந்து" எனக்குத் தமிழ்த் தெரியும் என்று எண்ணிக் கொண்டிருந்தேன். ஆயினும் அதில் பல பகுதிகள் விளங்க வில்லை. ஆதலால் இன்னும் தெளிவும் சுவையும் உள்ள நடையில் உரை வேண்டும். பண்டிதர் அல்லாத என்போலியரிடம் கருணை கொள்ளுங்கள் என்று கருணை வேண்டிக் கடிதம் எழுதுகின்றார். இக்கடிதம் போப் ஐயர் அவர்களின் தமிழ்க் காதலையல்லவா காட்டுகின்றது.

**இலக்கணநூல்கள்**

தமிழ் இலக்கியச் செல்வங்களை மொழி பெயர்த்த டாக்டர் போப், இலக்கண நூல்கள் சிலவற்றையும் மொழி பெயர்த்துள்ளார். தமிழர்களின் புறவாழ்வு இலக்கண நெறியினைக் காட்டும் புறப்பொருள் வெண்பாமாலையினை ஆங்கிலத்தில் எழுதி உலகுக்குத் தந்துள்ளார். சிறுவர்களுக்கு உரிய இலக்கண நூல் எனப் பெயரிட்டு வெளியிட்டுள்ளார்.


தொல்காப்பியத்தின் பெருமையினை உணர்ந்த போப்ஐயர், அது எல்லோருக்கும் பயன்பட வேண்டும் என்ற கருத்துப்பட அருமையும் பெருமையும் உள்ள தமிழின் பொருட்டுத் தொல்காப்பியத்திற்கு ஆராய்ச்சித்திறன் அமைந்த பதிப்பு ஒன்று வர வேண்டும். புராணக் கதைகளை விலக்கி விட்டு, முச்சங்க வரலாற்றை தக்க ஆதாரங் களைக் கொண்டு எழுத வேண்டும் என டாக்டர் ஐயர் அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

தமிழ் இலக்கியங்களையும், இலக்கணங் களையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த போப்பையர், தமிழ் இலக்கியச் செல்வங் களைப் பற்றி, "சிந்தாந்த தீபிகா", ராயல் "எஷியாட்டிக் சொஸைட்டி மலர்" போன்ற புகழ் சான்ற இதழ்களில் கட்டுரைகள் எழுதி வெளியிட்டுள்ளார்.

**பொங்கல் விழா**

இவ்வாறு தமிழைத் தன் மூச்சாகக் கொண்ட போப்பையர். தமிழர்களின் பண்பாட்டிலும் நாகரிகத்திலும் ஆர்வம் கொண்டு அவற்றைத் தாமும் மேற்கொண்டு ஒழுகினார். தமிழ் மக்கள் கொண்டாடும் விழாக்களில் கலந்து, தமிழரோடு தமிழராய் விழா வெடுத்து மகிழ்ந்தார். தமிழர்கள் கொண்டாடும் விழாக்களில் சிறந்த விழாப் பொங்கல் விழா.

தை முதல் நாளன்று இவ்விழாவில் வீதிகளிலும் வீடுகளிலும் வண்ணக் கோலங்கள் இட்டு



அழகுபடுத்துவர். உணவுக்கு உறுதுணை செய்யும் ஞாயிற்றுக்குப் பொங்கலிட்டு கூடியிருந்து உண்டு மகிழ்வர்.

இவ்விழாவினைப் போப்பையரும் கொண்டாடினார்.

பொங்கல் வாழ்த்தினை நண்பர்களுக்கு அனுப்பும் புதிய முறையினைப் புகுத்தினார். பொங்கல் வாழ்த்துப் பாடலாகக் கணியன் பூங்குன்றனார் பாடலை எழுதி, அதனை ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்து நண்பர்களுக்கு அனுப்பி வந்தார். தமிழ்ப் பெருமகனின் தனிப் பெரும் நெஞ்சம் தரணியெங்கும் கமழட்டும் என்ற போப்பையரின் தமிழ் நெஞ்சினை வாழ்த்தாத வாயும் உண்டோ?

**தமிழ்த் தாத்தாவிற்குக் கடிதம்:-**

மொழியாலும் இனத்தாலும் தன்னைத் தமிழன் என்று ஆக்கிக் கொண்ட போப்பையர் இறுதிவரைத் தமிழுக்காகவே வாழ்ந்தார். தம் வாழ்வின் இறுதிக் காலத்தில் டாக்டர் உ.வே. சாமிநாதரையரவர்களுக்கு, போப்பையர் எழுதிய கடிதத்தில்,

"ஒரு பொழுதும் வாழ்வதறியார் கருதுப
கோடியும் அல்ல பல"

என்ற திருக்குறளை எழுதி "நான்மிகவும் களைத்து இருக்கிறேன். இன்னும் ஏதேனும் செய்யலாம் என்று நம்பியிருக்கிறேன். பழந்தமிழ் நூல்களெல்லாம் புதுத் தமிழர்களுக்கு விளங்கும்படிச் செய்ய வேண்டும்" என்று தன் எண்ணத்தை எழுத்தால் தீட்டிக் காட்டுகிறார்.

எண்பது வயதிலும் தமிழ்ப் பணியே தன் இனிய பணி எனக் கருதிய போப்பையர் தம் **81**வது வயதில், தமிழோடு தமிழாய்க் கலந்தார். தம்முடைய மறைவு வருவதற்கு முன்பே. தம் கல்லறையில், தம்மை ஒரு தமிழ் மாணவன் என்று எழுதும்படி வேண்டினார். இந்த வேண்டுகோளுக்கு ஏற்ப இங்கிலாந்து நாட்டினர் இவரது கல்லறையில் டாக்டர் ஜீ.யு.போப் ஒரு தமிழ் மாணவர் என்று பொறித்திருக்கின்றனர்.



இந்தக் கல்லறை, ஆக்ஸ் போர்ட் நகரில், "செயிண்ட் ஜெபல்கர் செமிட்டிரி"யில் இன்றும் உள்ளது. கல்லறையில் தம்மைத் தமிழ் மாணவர் என்று குறிக்கச் சொன்ன போப் அவர்களை நினைக்கும் போது இக்காலப் பாவேந்தர் பாடல் ஒன்று நினைவுக்கு வருகிறது.

**"சாம்போதும் தமிழ் பேசிச் சாக**
**வேண்டும்-எந்தன்**
**சாம்பரும் தமிழ் மணந்து வேக**
**வேண்டும்"**

என்பது அப்பாடல். இப்பாடலுக்கு எங்கோ பிறந்த போப்பையர் சிறந்த இலக்கியமாகத் திகழ்ந்தார்.

இயேசு பெருமானின் பெருமைகளை எடுத்துக் கூறி சமயத்தை வளர்க்க வந்த போப்பையர் இனிய தமிழால் ஈர்க்கப்பெற்று, **"இருந்தமிழே உன்னால் இருக்கிறேன் வானோர் விருந்தமிழ்தம் எனினும் வேண்டேன்"** என்ற கொள்கையில் தேமதுரத் தமிழோசையை உலகமெலாம் கமழவிட்டார்.

இறை பணிக்குத் தன்னை ஆயத்த படுத்திக் கொண்ட தொண்டருக்கு, அவரது தமிழ்ப் பணியினைக் குறித்தே ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தார் டாக்டர் பட்டம் அளித்துச் சிறப்பித்தனர்.

நெல்லைநாட்டில் உள்ள சாயர்புரத்திலும் உதகமண்டலத்திலும், சிறிது காலம் பெங்களூரிலும் பணியாற்றிய இப்பெரியாரின் நினைவுகள் இன்றும் நெஞ்சினிக்கும் தமிழாகவே நிலவுகின்றன.

ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் அருந்தமிழை இருபதாண்டாகக் கற்பித்து, அந்நாட்டினரை தமிழறியச் செய்தார். சுருங்கக் கூறின் மேலை நாட்டார்க்குத் தமிழகத்தின் கலைச் செல்வத்தைக் காட்டியவர் டாக்டர் போப்பையர்.

நீதியின் நேர்மையை உணர்த்தியவர் டாக்டர் போப்பையர், ஞானச் செல்வத்தை வாரி வழங்கியவர் டாக்டர் போப்பையர். தமிழ்ப் பணியினையே தம் உயிர்ப் பணியாகக் கொண்ட இவரின் தொண்டு கால வெள்ளத்தையும் கடந்து கலங்கரை விளக்கமாய் கவினுற விளங்குமன்றோ?

# உலகம் உய்ய உதித்த உடையவர்

கிழக்கு திசையை நோக்கி வந்த இராமானுஜர் காசியை அடைந்து கங்கையிலே நீராடி அப்பகுதியில் உள்ள புலவர்களை எல்லாம் திருத்தி வாதிலே வென்று, அந்த புண்ணிய தலத்திலே எழுந்தருளியுள்ள தாமரைக்கண்ணனாகிய பெருமாளின் திருக்கோயிலுக்கு எழுந்தருளி, பின்னர் பூரிஜெகநாத் அடைந்து இரவிலே அங்கு தங்கும்பொழுது திருமால் அவருடைய கனவிலே தோன்றி "இத்தலத்தில் உள்ளோர் எப்பொழுதும் நம்மையே ஆச்சாரியனாக நினைத்துக் கொண்டிருப்பதால் இத்தலத்தில் வசிப்போர்களை நீர் திருத்த வேண்டாம் அப்பாலே செல்வீராக" என்று சொல்லி வானளாவிய புகழுடைய இராமானுஜரையும் அவருடைய சீடர்களையும் ஸ்ரீகூர்மம் திருத்தலத்தை அடையும்படி செய்தார்.




**"திருத்திகழும் திருமார்பன் செகநாதன்**
**முன்புலகில்**
**குருக்களுக்கும் குருக்களெனக்**
**குலவுமறைஅறைதலினால்**
**இருக்கின்முடி வுணர்ந்தொடுங்கும்**
**எதிநாதர் கனவிடையில்**
**அருத்தியொடும் சென்றுநம்மை**
**ஆசிரியனாகஎன்றும்"**

**ஸ்ரீராமானுஜ வைபம் பாடல்–741.**

**"எண்ணி யிருப்பார் ஆதலினால் ஈங்கு**
**ளாரை நீதிருத்தல்**
**புண்ணி யத்தின் கொழுந்**
**தன்னாய் வேண்டாம் அப்பால்**
**போதியென**
**விண்ணில் ஓங்கும் விரிபுகழார்**
**தொண்டக்குழாத்தை**
**விரைந் தெடுத்து**
**மண்ணில் ஈரா(று) ஓசனைக்குத்**
**தெற்கே வைத்தம் மான் மீண்டான்".**

**ஸ்ரீராமானுஜ வைபம் பாடல்–742.**


கண்விழித்து எழுந்த இராமானுஜர் தன் சீடர்களை நோக்கி திருஅனந்தபுரத்து பெருமாளும் இந்த ஊர் ஜகந்நாதரும் இருவரும் ஒன்றே என்றும், மேலும் தான் கனவில் கண்டபடி ஜெகநாத் என்ற ஊரில் நாம் தூங்கினோம், தற்பொழுது இருக்கும் இடத்தைப் பாருங்கள் என்று சொல்லி அந்த வட்டாரத்தில் இருக்கும் பெருமாள் திருக்கோயில்களை அடியார்களுடன் சென்று வழிபட்டு உயர்ந்த திருவேங்கட மலையிலே உள்ள ஸ்ரீநிவாசப்பெருமாளை வணங்கி அங்கிருந்து புறப்பட்டு தொண்டை மண்டலத்திலே உள்ள காஞ்சி வரதராஜப்பெருமானை வணங்கி பின் அங்கிருந்து புறப்பட்டு திருக்கோவலூரில் அடியாருடன் சென்று முதலாழ்வார்கள் போற்றிய பெருமாளை வணங்கி சோழ நாட்டிலே திருவயிந்தியபுரத்திலுள்ள திருமங்கையாழ்வார் போற்றிய பெருமாளை வணங்கி மற்றும் சோழ மண்டலத்திலே உள்ள அனைத்து திவ்ய தேசங்களையும் வழிபட்டு பெரும்புகழும், சீரும்



**பெ.ராமநாத பிள்ளை,**
**செயல் அலுவலர்,**
**மாசாணியம்மன் கோயில் ஆனைமலை,**

சிறப்பும் வாய்ந்த ஸ்ரீரங்கம் நகர் அடைந்து திருவரங்கப்பெருமாளின் திருவடியை தொழுதார். அப்பொழுது திருவரங்கப் பெருமாள் தன்னை வணங்கி நிற்கும் எதிராஜ ராகிய இராமானுஜரை நோக்கி "உயர்ந்த புண்ணிய வடிவுடையவனே எவ்வித குறையுமில்லாமல் நமது செங்கோல் செலுத்தும் பெருமையை எங்கும் பரப்பி வந்தாயா" என்று அன்போடு வினவவும் பெருமை பொருந்திய உடையவர் பெருமாளை நோக்கி தேவரீருக்கு தொண்டு செய்து வாழ்வதே என் கடன் என்னை உமக்கென்றே அர்ப்பணித்துள்ளேன் தலைவா சரணம்" என பணிந்து திருக் கோயிலை வலம் வந்து வணங்கி பல்லாண்டு பாடி அடியார்கள் புடைசூழ திருமடத்திற்கு எழுந்தருளி அருளாளப் பெருமாள் எம்பெருமானாரும், கூரத்தாழ்வாரும், முதலியாண்டாரும் திருவடிதொழ உடையவர் சிலநாள் அங்கே இருந்தார்.

இவ்வாறு வாழ்ந்து வரும் நாளில் மழைக்குறைவு ஏற்பட்டதால், நாட்டிலே வளம் சுருங்க மேல் நாட்டில் வசித்து வந்த பல மலைஜாதி மக்களில் "கட்டளை வாரியர்" என்ற இனத்தவர்கள் (கட்டளைவாரி என்பது ஒரு அந்தணரது பெயர் என்று குருபரம்பராப் ரபாவத்தில் சொல்லப்பட்டுள்ளது **(1016)**. அவ்வாறு ஸ்ரீரங்கத்தில் வந்தடைந்த மக்களில் கொங்குபிராட்டி என்று அழைக்கப்படும் ஒரு புண்ணியவதி தன் கணவரோடு ஓர் இல்லத்தில் வசித்துவந்ததார். தான் வசித்து வரும் அவ்வீட்டின் மாடியின் மீது ஏறி நின்று இராமானுஜரின் திருமடத்தை நோக்கும் பொழுது அங்கே அரசர்களும்., பக்தர்களும் மடத்திற்குள் நுழைவதையும் இராமானுஜரை வணங்குவதையும் பார்த்தாள். அதே சமயம் அதே இராமானுஜர் வீடுகள் தோறும் பிச்சை எடுத்து நாள்தோறும் அதையே உணவாகக் கொண்டு வாழ்வதையும் பார்த்துவிட்டு மன்னன் முதலானவர்கள் "சரணம் சரணம்" என்று வணங்கும் பொழுது இவர் பிச்சை எடுத்து உண்பது புதுமையாக உள்ளது என்று எண்ணினாள்.



**"ஓங்கிய மனைகள் தோறும்**
**உபாதானம் பண்ணி நாளும்**
**ஆங்கவை உணவ தாக வாழ்வதும்**
**அனைத்தும் ஆண்டப்**
**பூங்குழல் நோக்கிஈதோர் புதுமைஇவ்**
**வுலகை எல்லாம்**
**தாங்கிய மன்ன னாதி சரணென**
**இவரைத் தாழ"**

**ஸ்ரீராமானுஜ வைபம் பாடல்–755.**

ஒருநாள் தானும் இராமானுஜருக்கு பிச்சை அளிக்க வேண்டும் என்று உறுதிபூண்டாள். எம்பெருமானாரும் பிச்சை எடுத்து வரும்பொழுது மாடியிலே இருந்து பார்த்த கொங்குப் பிராட்டியார் கீழே இறங்கி வந்து இராமானுஜரை தடுத்து நிறுத்தி சுவாமிகளே உங்களிடம் ஓர் கேள்வி கேட்க வேண்டும். புறப்பட வேண்டாம், நில்லும் என்று சொல்லி கையால் தடுத்தாள், உடனே இராமானுஜர் கேட்க வேண்டியது ஏதேனும் இருந்தால் சொல்வீராக எம் அன்னையே என்று கூறவும் உடனே கொங்குப்பிராட்டியார் இராமானுஜரை வணங்கி மின்னல் போன்று ஒளிவீசக் கூடிய திருமேனி உடையவரே உலகை ஆளக்கூடிய மன்னவர்கள் எல்லாம் உம்மை வணங்கும்படிக்கு நீர் அவர்களுக்கு என்ன கொடுத்தீர் என்றாள். உடனே இராமானுஜரும் தாயே திரு அரங்கத்தில் எழுந்தருளியுள்ள பெருமாளின் திருநாமங்கள் கணக்கற்றவை ஆகும். அவற்றில் ஒன்றை அந்த மன்னனுக்கு உபதேசித்தேன். அவர்கள் இதனால் என்னை மேலானவனாக எண்ணி என்னையே சுற்றி வருகிறார்கள் என்று கூறினார். அப்படியென்றால் அடியேனுக்கும் உபதேசிக்க வேண்டும் என்று வேண்டவும் பெருமையுடைய உடையவர் பாவங்கள் தொலையும் வண்ணம் வேதத்தின் தலைவனாகிய திருமால் தாங்கியுள்ள சங்கு சக்கரம் இவற்றின் இலச்சினையை கொங்குப்பிராட்டியின் தோளில் பொருத்தி அவள் காதில் கண்ணனுடைய எட்டு எழுத்து மந்திரத்தை உபதேசித்தார். அந்த கொங்குப்பிராட்டியும் ஸ்ரீரங்கப்பெருமானை தன் இதயத்தில் நிறுத்தி வாழ்ந்து வந்தாள். அப்பொழுது மேலை நாட்டிலே நல்லமழை பொழிந்து செழிப்பு ஏற்பட்டதும், தன்சொந்த ஊருக்கு செல்ல முடிவெடுத்து இராமானுஜரிடம் அடிபணிந்து நாங்கள் எங்கள் சொந்த ஊருக்கு செல்ல விடை அளிப்பீராக என்று வேண்டினாள்.

இராமானுஜரும் அதற்கு விடை அளித்து "என்னால் ஆக வேண்டியது ஏதாவது உண்டுமா" என்று கேட்கவும் கொங்கு பிராட்டியார் மிகவும் மனம் மகிழ்ந்து எம்உயிர் தலைவரே எனக்கு உபதேசம் அளித்து நல்வாழ்வு அளித்தீர். தற்பொழுது தங்கள் திருவடித்தாமரையின் பாதுகைகள் இரண்டையும் தரவேண்டும் என்று வேண்டவும், இராமானுஜரும் தனது பாதுகை களை அளித்தார். இராமானுஜரி டமிருந்து பாதுகைகளை பெற்றுக்கொண்ட கொங்குப் பிராட்டியார் அதனை தலையிலே வைத்து பூமியிலே விழுந்து வணங்கி இராமானு ஜரிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு தன் சொந்த ஊருக்கு திரும்பினாள்.

***"சீராரு மரவடியைத் திருவனையாள்***
***வசத்தளித்தார்***
***ஆராத காதலனாய் ஏற்று முடிமிசை***
***அமைத்துப்***
***பாராரப் பணிந்தேதித்திப்***
***பனிமலர்க்கண் நீர்ததும்பக்***
***காரார்பூங் குழலியும்தன்***
***கணவனொடும் ஏகினாள்".***
***ஸ்ரீராமானுஜ வைபம் பாடல்–766.***

இவ்வாறு வாழ்ந்து வரும் நாளில் திருவரங்கத்தமுதனார் என்ற செல்வந்தர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் இளமையில் பெண்களின் அழகிலே மயங்கி பழி, பாவத்திற்கு அஞ்சாமல் கண்ணுக்கு அழகான பெண்கள் இருக்கும் வீடுகளுக்கு சென்று இரவும், பகலும் தன்னையே மறந்து மயங்கி வாழ்ந்து வந்தார். இச்செய்தியை சிலசீடர்கள் இராமானுஜரிடம் தெரிவிக்கவும், இராமா னுஜரும் மனம் இறங்கி அவரை தம் மடத் திற்கு அழைத்து நீங்காத ஞானத்தை உடைய சாதுக்கள் கூட்டத்தில் அவரை இருக்க வைத்தார். ஆனால் திருவரங்கத் தமுதனார் பழைய வாசனையாலும் மன எழுச்சி யினாலும், சாதுக்கள் சந்தியாவந்தனம் செய்யும் நேரத்தில் சாதுக்களை விட்டுபிரிந்து பெண்களிடத்தில் போய் அங்கே மாயையில் மயங்கி இருந்தார். நாள்தோறும் இவ்வாறு நடப்பதைஅறிந்த இராமானுஜர் திருவரங்கத் தமுதனாரை அழைத்து வந்து ஸ்ரீரங்கநாதரின் சன்னதியிலே நிறுத்தி பெருமாளே நான் இவரைத்திருத்த முடியாது இவர் முற்பிறவியில் செய்த பாவத்தின் பலனை தற் பொழுது அனுபவிக்கிறார் போலும், இவருக்காக நான் பட்ட துன்பம் கொஞ்சம்நஞ்சம் அல்ல, எனவே உம்முடைய விருப்பப்படியே இவருக்கு செய்திடுக என்று பெருமாளிடம் மிகவும் வேண்டினார். இராமானுஜரும், திருவரங்கத்தமுதனாரும் இருவரும் பெருமாளுக்கு வேண்டியவர் என்பதால் பெருமாள் வாய்பேசாமல் மௌனமாக இருந்தார்.

அப்பொழுது இராமானுஜரின் சீடராகிய கூரத்தாழ்வார் இராமானுஜரிடம் வந்து திருவரங்கத்தமுதனாரை எனக்கு அருள்வீராக, இந்த ஜீவன் அநியாயமாக தப்பிச்செல்லாமல் நான் பார்த்துக்கொள்கிறேன் என்று சொல்லவும் இராமானுஜர் மிகவும் மனம் மகிழ்ந்து திருவரங்கத்தமுதனாரை கூரத்தாழ்வாரின் கையிலே ஒப்படைத்தார்.

***"நின்றான் ஆழ்வான் அவன்கையில்***
***நிகரில் எதிகள் தனிநாதர்***
***நன்றாய் திருத்திப் பணிகொளென***
***அமுதனாரை நயந்தளிப்பச்***
***சென்றார் அவன்பின் முன்னாழ்வான்***
***'திரிந்தான் பலநாள் இதம் கூறிக்***
***குன்றா வினையின் தொடரறுத்துக்***
***குணமூன் றினுக்கும் குறிப்பறிய"***
***ஸ்ரீராமானுஜ வைபம் பாடல்–773.***

கூரத்தாழ்வாரும், திருவரங்கத்த முதனாருக்கு பலநாட்கள் தொடர்ந்து நல்ல உபதேசம் செய்து திருவரங்கத்தமுதனாரிடம் காணப்பட்ட மிருக குணங்களை நீக்கி அவரை தெய்வத்தன்மை நிறைந்தவராக மாற்றி இராமானுஜரின் திருவடியின் கீழ்படிய வைத்தார். இந்த திருவரங்கத்தமுதனாரே பிற்காலத்தில் தமிழ் வேதமாகிய திவ்ய பிரபஞ்சங்கள் அனைத்தும் வடித்தெடுத்த சாரமாக விளங்கக்கூடிய "இராமானுஜ நூற்றந்தாதி என்ற நூலை உலகம் உய்வ தற்காக இயற்றினார்". மேலும் உயிர்கள் உய் யும் பொருட்டு நூற்றெட்டுத் திருப்பதி அடை வும்பாடி காஞ்சி வரதராஜப் பெருமா னா ரால் எதிராஜர் என்று அழைக்கப் பட்டும், ஸ்ரீரங்கப்பெருமானாரால் உடையவர் என்றும் அழைக்கப் பட்ட மட்டில்லா மகிமையுடைய இராமானுஜரின் திருவடிக்கு கீழ் வாழ்ந்து வந்தார்.




**– தொடரும்**


# "கொடைதரும் பொங்கல்"

**'தை'**யவள் வந்தால் போதும்
தித்திக்கும் தமிழர் நெஞ்சம்
கையவள் அசைத்தால் போதும்
களிப்பினில் மூழ்கும் வையம்...!
மெய்யினை வருத்தி நாளும்
வயல்வெளி உழைப்போரெல்லாம்
நெய்யுடை உணவை மாந்தும்
நன்னிலை பெறுவார் மாதோ...!

நேரிய நெறிகள் கண்கள்
நித்தியப் பணிகள் கைகள்
கூரிய அறிவே சொத்து
கொள்கையில் பற்றே மூச்சு...!
தேறிய கலைகள் யாவும்
சுற்றமும் நட்பும்! இந்தச்
சீரிய எண்ணம் தம்மைத்
தருபவள் பொங்கல் பாவை...!




உழைப்பவர் உயர வேண்டும்
உயர்ந்தவர் நிலைக்க வேண்டும்
பிழைப்பதற் காக ஏங்கும்
படித்தவர் தொழில்கள் பெற்றே
தழைத்திட வேண்டும்: சான்றோர்
தகுநெறி காட்ட வேண்டும்
குழைந்திடும் பொன்னாள் இன்று
கொடைதரும் பொங்கல் வாழ்க...!



*–கவிமாமணி டாக்டர் வேலூர்.ம.நாராயணன் எம்.ஏ.பி.எச்.டி*

***"அடியார் நிமலத் திருவகத்துள் அன்பு பொறுமை அவா அறுத்தல்***
***அடுப்பு ஆங்கு அமைத்து, மலக்காட்டத்ததிக ஞானக் கனல் மூட்டி,***
***மடியாதிருந்த உயிர்க்கலசம் வழிய, அருள் பேருலை வார்த்து***
***மாறாப் பெருமைச் சிவானந்த மதுரச்சோறு தினம் பொங்கி,***
***விடியாச் சீவபோத இருள்வீய, மௌனச் சுடர் விளக்கு***
***விளக்கி, இருந்தபடி இருந்து, மேலாம் சிற்றில் விளையாடும்***
***செடு தீரகத்தோர் புகழ் வாலை சிறுவர், சிற்றில் சிதையேலே,***
***தேரூர் வீதிப்போரூரா, சிறியேஞ் சிற்றில் சிதையேலே,"***

**– சிதம்பர சுவாமிகள்.**



மிருகண்டு முனிவர் அரச வனத்தில் (இன்றைய கோட்டை) தங்கி, ஆசிரமம் அமைத்து சிகர சிகாமணிநாதரை (கிராம அர்த்தஞாதீஸ்வரர்) நோக்கித் தவமியற்றி வந்தார். அங்கு வந்த வஞ்சனை, கோவதை என்ற இரு அரக்கியர் முனிவரிடம் தங்களுக்கு பலம் வாய்ந்த மகன் பிறக்க அருள வேண்டும் என்று ஆசி வேண்டினர். அதன்படியே அவர்களை ஆசீர்வதித்து அனுப்பினார்.

இந்நிலையில், சீடனை அழைத்து, சிவ வழிபாடு செய்ய மலர்களைக் கொய்து வருமாறு பணித்தார். சீடன் நந்தவனம் சென்றபோது, அங்கே இரு அரக்கியர்களும் அங்கிருந்த பூக்களை அழித்துக் கொண்டிருந்தனர். அதனால் வேறு இடம் சென்று தேவையான மலர்களைக் கொய்து வந்தான். இதற்குள் தாமதமாகிவிட முனிவரின் சாபத்திற்கு ஆளானான். அதன்படி அச்சீடன் அந்த அரக்கியர்களுக்கு மகனாகப் பிறக்க நேர்ந்தது.

அவ்வாறு பிறந்த அவன் கடல் நீரைக் குடித்த மேகம் போல் இருந்தான். அதனால் அவனுக்குக் காருண்டன் என்ற பெயர் ஏற்பட்டது. அவனும் அரச வனம் அருகிலேயே தனது நகரை அமைத்து முனிவர் களின் யாகசாலை களை அழித்து, பல்வேறு தொல்லைகளைக் கொடுத்து வந்தான்.

**தெய்வீக மன்னன்**

இந்நிலையில், தங்களுக்கு உதவி செய்ய சிகர சிகாமணிநாதரை முனிவர்கள் வேண்டி நிற்க, அவர் முருகனிடம் செல்லுமாறு வழி கூறினார். இதன்பின் முருகப் பெருமானிடம் சென்று முறையிட்டனர். அப்போது முருகன் காருண்டனை வதைக்க யாகம் மேற்கொள்ளச் சொன்னார். அதில் தோன்றும் மன்னனிடம் உங்கள் குறையைக் கூற, உங்களுக்கு விடிவு காலம் பிறக்கும் என்று அருள் கூறினார். அதன்படியே, முனிவர்கள் செய்த யாகத்தில் பச்சைக் குதிரையின் மேல் ஒரு அரசன் யாகத் தீயில் இருந்து தோன்றினான். அவனே தெய்வீக மன்னன் என்று அழைக்கப்படுகிறான். இவனது வீரத்தால் மூவேந்தர்களுக்கும் மத்தியில் ஒரு நாட்டை உருவாக்கினான். அதற்கு நடுநாடு என்ற பெயர் வழங்கப்பட்டது.

இம்மன்னனை நாடிய முனிவர்கள், தங்கள் இருப்பிடங்களில் காருண்டனின் அரக்க செயல்களையும், கொடிய விலங்குகளின் இடையூறுகளையும் கூறி தங்களைக் காக்குமாறு வேண்டிக் கொண்டனர். அவர்களுக்கு உதவ விரும்பிய தெய்வீக மன்னன் முதலில் வேட்டைக்குச் சென்றான். அப்போது ஒரு அதிசய மான் அவன் முன் வந்து நின்றது. அதைப் பிடிக்க முயன்றபோது, அது சிகரசிகாமணி நாதர் சன்னதிக்குள் சென்று மறைந்தது.

அப்போது இறைவன் அந்தணர் வடிவம் கொண்டு அங்கே தோன்றினார். தெய்வீக மன்னன் அவரிடம் தன்னுடைய களைப்பைக் கூறி நீர்நிலை இருக்கும் இடத்தைக் கேட்டார். அதற்கு, அந்த அந்தணர், 'முனிவர்களுக்குக் கொடுமை செய்யும் காருண்டனை கொல்வதற்கு நீ உறுதி கூறினால் உனது களைப்பை நான்



# காசி அந்தணர்கள் வழிபடும் கோட்டை கிராம அர்த்த ஞாதீசுவரர் ஆலயம்

"போக்குவேன்," என்று கூறி னார். அதனை அம்மன்னன் ஏற்றுக் கொள்ள, இறைவன் தனது சுய உருவைக் காட்டி அருளினார். அதன்பின் அனைவருக்கும் உணவளித்து பசி நீக்கினார். தன் கையில் இருந்த தண்டினால் பூமியைக் கீறி நீருற்றையும் உருவாக்கி அனைவரின் தாகத்தையும் தீர்த்து வைத்தார். இறைவன் அருளால் கிடைத்த மழு ஆயுதத்தை எடுத்துக் கொண்டு சென்ற அரசர், பிறையூர்க் குன்றில் தங்கியிருந்த காருண்டனை வதம் செய்து அழித்தான். முனிவர்களும் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தனர்.



**பிரமஹத்தி தோஷம்**

காருண்டனை அழித்ததால் மன்னனுக்கு பிரம்மஹத்தி தோஷம் ஏற்பட்டது. இது நீங்க, முனிவர்கள் ஆலோசனை கூறினர். 1200 அந்தணர்களுக்கு இல்லம் அமைத்துத் தந்து, அந்த இல்லங்களுக்கு நடுவே சிகரசிகாமணி நாதருக்கு புதிய ஆலயம் எழுப்பி, அந்தணர்களுக்கும், பூஜை நடக்கவும் உதவினால் மன்னனைப் பிடித்த தோஷம் விலகும் என்று அறிவுரை கூறினார்.

அதன்படியே, காசி மாநகரம் சென்ற தெய்வீக மன்னன், 1200 பேர் என்பதை மறந்து 800 அந்தணர்களை மட்டுமே அழைத்து வந்து தென் பெண்ணை ஆற்றங்கரையில் தெள்ளாறு, குழப்பலூர், சித்திங்கூர், கோவலூர் ஆகிய நான்கு ஊர்களில் குடியமர்த்தினார். மீதமுள்ள 400 அந்தணர் களை அரசவனத்திற்கு அழைத்து வந்தான். அப்போது அவனுக்கு 1200 பேர் என்ற நினைவு வந்தது. குழப்பத்தில் இருந்த மன்னன் முன் சிகரசிகாமணி நாதர் அந்தணர் உருவம் கொண்டு தோன்றினார். அவரிடமே மன்னன் தன் ஐயத்தைக் கூற, அதற்கு அந்த அந்தணர், "அந்த மறதி சிவனருள் தான். வேறொன்றும் இல்லை. நீ சம்மதித்தால் மீதமுள்ள 400 அந்தணர் களுக்கு அளிக்க விரும்பும் பாகத்தினை எனக்குக் கொடு. உன் ஆசைப் படியே 1200 அந்தணர்களுக்கு தானம் செய்த பயனை நீ பெறுவாய்," என்று கூறினார். அதைக் கேட்டுத் தயங்கி நின்ற தெய் வீக மன்னன் முன்பாக, சிகரசி காமணிநாதர் காட்சி தந்தார்.

அதைக் கண்டு வியந்து இறைவனை வணங்கிய தெய்வீக மன்னன் அந்த 400 அந்தணர்களின் பங்கை கொடுக்கச் சம்மதித்தான். இதற்குள் இறைவன் மூங்கில் வனத்தில் சிவலிங்க வடிவாக மறைந்தார். அவரைக் காணும் ஆவலில் மூங்கில்களை வெட்டிக் கொண்டே வந்தான். அப்போது இறைவனின் திருமேனியில் மன்னனின் வாள் பட்டு இரத்தம் பெருக்கெடுத்தது. இதைக் கண்ட மன்னன் தவறை உணர்ந்து தனது வாளினால் கழுத்தை அறுத்துக் கொள்ள முயன்றான். அப்பொழுது மீண்டும் காட்சி தந்த இறைவன், "மனம் கலங்காதே இதுவும் எனது திருவிளையாடலே," என்று கூறி, அரசவனம் என்ற பெயருடைய இத்தலத்தில் வேதம் உணர்ந்த அந்தணர்களுடன் பாகம் பெற்றதனால், இறையானரையூர் என்றும், நீ தத்தம் செய்த நீரை ஏற்றதால், நீரேற்புரி என்றும், மூங்கில்கள் நிறைந்த வனம் என்பதால் மூங்கில்வனம் என்றும் அழைக்கப்படும் என்று கூறினார்.

இத்தலத்தில் தருமம் செய்தவர்கள் ஒன்றுக்குக் கோடியாக வளம் பெற்று வாழ்வார்கள் என்று அருள் புரிந்தார். இவ்வனத்தில் பெரிய சிவாலயம் எழுப்பி, தவம் செய்து நீண்ட நாள் வாழ்வாயாக அன்று ஆசி கூறி மறைந்தார். அதன்படியே செய்து முடித்த மன்னனின் பிரம்மஹத்தி தோஷமும் முழுவதுமாக நீங்கியது.

இன்றும் ஆண்டுதோறும் காசி பிராமணர் கள் இங்கு வந்து வழிபட்டுச் செல்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

**தொன்மைச் சிறப்பு**

சோழ கேரள சதுர்வேதி மங்கலம், சோழ

கேரள நல்லூர் பிடாகம், இறைவாசநல்லூர் என பல்வேறு பெயர்களால் இன்றைய கோட்டை அழைக்கப் பட்டது. திருமுறைகளில் இறையானரையூர் என்று இவ்வூர் போற்றப்படுகிறது. தெய்வீக மன்னன் என்னும் மன்னனால் இக்கோவில் எழுப் பப்பட்டது என கூறப்படுகிறது.

இத்தலத்திற்கு இறைசை புராணம் மற்றும் புராணத் திருமலைநாதர் இயற்றிய இறைவாசநல்லூர் தல புராணம் ஆகியவை தல புராணங்களாகத் திகழ்கின்றன. இப்புராணத்தைப் பெரும் முயற்சி எடுத்துப் பதிப்பித்தவர் தமிழ்த் தாத்தா உ.வே.சாமிநாத ஐயர் ஆவார். இவ் வாலயத்தில் எண்ணற்ற கல்வெட்டுக் கள் இதன் தொன்மைச் சிறப்பை எடுத்துரைக் கின்றன.



**கல்வெட்டுகள்**

கி.பி.1906ஆம் ஆண்டு தொல்லியல் ஆய்வறிக்கையில் 63 கல்வெட்டுகள் கண்டறியப் பட்டுள்ளன. இதில் மிகவும் பழைமை வாய்ந்தது ஒன்பதாம் நூற்றாண்டு கல்வெட்டாகும்.

**ஆலய அமைப்பு**

இக்கோவில் மாடக்கோவில் வகையைச் சார்ந்ததாகும். மாடக்கோயிலின் அமைப்புக்கு ஏற்றபடி யானை ஏற முடியாத மேடைப் பகுதியை அடிப்படையாகக் கொண்டு கட்டப்பட்டுள்ளது. மேலும், அரிய சிற்ப வேலைப்பாடுகள் நிரம்பிய மாடிகளைக் கொண்டு அமைந்துள்ளது. இக்கோயில் சில ஆகம இலக்கணப்படி அமைந்துள்ளது. கோயில் கட்டிடத்தின் கீழ்ப்பகுதி கருங்கல் லாலும், மேற்பகுதி செங்கற்களைக் கொண் டும் அமைக்கப்பட்டுள்ளது. இக்கோயிலின் மாடியில் அலங்கார மண்டபம் எழிலுடன் அமைந்துள்ளது. இம்மண்டபத்தின் கல் தூண்களில் இத்தல வரலாற்றை எடுத்துரைக்கும் சிற்பங்கள் அமைந்துள்ளன. இக்கோயிலுக்கு ஐந்து திருச் சுற்றுகள் அமைந்துள்ளதால் இக்கோயில் 'பஞ்ச பிரகார கோயில்' என்று அழைக்கப் படுகிறது.

**இறைவன் – இறைவி**

இத்தலத்தின் மூலவரின் பழைய பெயர் சிகரசிகாமணி நாதர் என்பதாகும். இறைவனின் இன்றைய திருப்பெயர் கிராம அர்த்தஞாதீசுவரர். கிராமம் என்பதற்கு ஊர் என்றும், அர்த்தம் என்பதற்குப் பாதி என்றும், ஞாதி என்பதற்கு பங்காளி என்றும் பொருள். இது தவிர, ஊர் பாகம் கொண்டார், அரசவனத்திறை, மங்கை யொருபாகன், ஜோதிலிங்கநாதன், அரசவனத்தரன் என பல்வேறு பெயர்கள் வழங்கப்பட்டாலும், கிராம அர்த்தஞாதீசுவரர் என்ற பெயரிலேயே இறைவன் அழைக்கப் படுகின்றார். இவர் மேற்கு நோக்கி சுயம்புவாகக் காட்சி தருகின் றார். சோழ மன்னர்களின் கல்வெட்டுக்களில் ஊர் பாகம் கொண்டருளிய மகாதேவர் என் றும், ஊர் பாகம் கொண்டருளிய நாயனார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மூலவரின் பீடம் சதுர வடிவில் அமைந்துள்ளது.

மூன்றாம் திருச்சுற்றில், நால்வர், மகா கணபதி, வல்லப கணபதி, ஆத்மலிங்கம் ஆகியவை அடுத்தடுத்து அமைந்துள்ளன. இதையடுத்து சோமாஸ்கந்தர், முருகன் சன்னதியும், அதன் தொடர்ச் சியாக அகத்திய லிங்கம், இரணலிங்கேஸ்வரர், காசி விசுவநாதர், விசாலாட்சி நடராசர் சன்னதிகளும் அமைந்துள்ளன. நந்திதேவர் மேற்கு நோக்கிக் காட்சி தருகின்றார். காருண்டனை அழிக்க அவன் இருக்கும் திசையை நந்திதேவர் காட்டியதால், இக்கோலம் எனக் கூறப்படுகின்றது.

ஆலயத்தின் தென்மேற்கு மூலையில் அம்மன் சன்னதி அமைந்துள்ளது. அன்னை யின் பெயர் பெரியநாயகி வடமொழியில் பிருஹந்நாயகி என அழைக்கப் படுகின்றாள். அம்மனுக்கு எதிரில் நந்தி வாகனமாக அமைந்துள்ளது.

**சம்ஹார பிரயோக துர்க்கை:** அம்மன் கருவறைக்கு முன்பாக சம்ஹார பிரயோக துர்க்கை அமைந்துள்ளது. சம்ஹாரத்திற்கு ஆயத்தமாகும் கோலத்தில் எட்டு கரங்களுடன், ஆயுதம் தாங்கிய கோலத்தில்


காட்சி தருவது அபூர்வகோல மாகும்.

**வீராசன தட்சிணாமூர்த்தி**

உத்தமசோழன் காலத்து வீராசன தட்சிணா மூர்த்தியின் அரிய கோலம் குறிப்பிடத் தக்கது. அகலமாக விரிந்த ஜடா மண்டலத்தில் எடுப்பான தோற்றத்தில், சரிந்த ஆடையுடன், நிறைந்த ஆபரணங் களுடன் காட்சி தருகின் றார். இது அபூர்வமான திருக்கோலமாகும்.

**நூற்றுக்கால் மண்டபம்:**

இராஜகோபு ரத்தை அடுத்து அழகிய நூற்றுக்கால் மண்டபம் அமைந்துள்ளது. இம்மண்டபத் தின் மேடையில் பெரிய அளவிலான கருங்கல் மேடை எழிலுடன் அமைந்துள்ளது. பார்ப் பதற்கு மர வேலைப்பாடு போன்ற அமைந் துள்ளது நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. விழாக் காலங்களில் உற்சவ மூர்த்திகள் இங்கு அமர்ந்து காட்சி தருவது வழக்கம்.



**தலமரம் – தீர்த்தம்:**

இவ்வாலயத்தின் தலமரமாக பலாமரம் திகழ் கின்றது. ஆலயத்தின் வடமேற்கு மூலையில் சிவாதலத் தீர்த்தமும், ஊரின் வெளியே பராமரிப்பின்றி தண்டத் தீர்த்தமும் அமைந்துள்ளன.

**அமைவிடம்** இவ்வூர் விழுப் புரம் மாவட்டம் உளுந்தூர் பேட்டை வட்டத்தில் அமைந்துள்ளது. சென்னைக்குத் தென்மேற்கே 210 கி.மீ., விழுப்புரத்திற்கு மேற்கே 49 கி.மீ., திருவண்ணாமலைக்கு வடக்கே 64 கி.மீ., திருக் கோவிலூருக்கு வடக்கே 24 கி.மீ., கள்ளக் குறிச்சிக்கு கிழக்கே 24 கி.மீ., உளுந்தூர் பேட்டைக்கு மேற்கே 10 கி.மீ., தொலைவில் கோட்டை அமைந்துள்ளது. சென்னை – கள்ளக்குறிச்சி வழித்தடத்தில் ஏராளமான பேருந்து வசதிகள் உண்டு. அனைத்துப் பேருந்து களும் கோட்டையில் நின்று செல்லும்.

**தரிசன நேரம்**

காலை 7.00 மணி முதல் நண்பகல் 12 மணி வரையிலும், மாலை 6.00 மணி முதல் இரவு 8.00 மணி வரையிலும் ஆலயம் திறந்திருக்கும்.

**பிற ஆலயங்கள் – ஆஞ்ச நேயர் சந்நிதி:**சிவன் கோயிலுக் குத் தென் கிழக்கே சிறிது தொலைவில் ஒரு சிறு மலையின் மீது பதினைந்து அடி உயர புடைப்புச் சிற்பமாக ஆஞ்ச நேயர் உருவம் சஞ்சீவி மலையைத் தூக்கிச் செல்லும் கோலத்தில் செதுக்கப் பட்டுள்ளது. இந்த மலையை கருவறையாகக் கொண்டு ஆஞ்ச நேயர் சந்நிதி அமைந்துள் ளது. இது மிகவும் தொன்மை வாய்ந்ததாகும்.

இக்கோயி லின் அருகே ஒரு பெரிய திருக் குளம் அமைந்துள் ளது. இக்குளம் நம்பி மகராஜன் என்பவனால் வெட்டப்பட்ட தாகும்.

**பெருமாள் ஆலயம்**

இவ்வூரில் பெருமாள் ஆலயம் எழுப்ப சிவன் கோயில் இராஜகோபுரத்தின் எதிரே கடைக்கால் தோண்டியபோது பூமிக்கு அடியில் ஸ்ரீ இராஜ நாராயண விண்ணகர் என்ற பெயர் கண்டுபிடிக்கப்பட்டது. இதன் மூலம் இங்கே பெருமாள் ஆலயம் இருந்து காலத்தால் மறைந்ததை அறிய முடிகிறது.


விழுப்புரம் மாவட்டத்தில் அமைந்துள்ள அரிய மாடக் கோயிலாக விளங்கும் கோட்டை கிராம அர்த்தஜுநீசுவரர் ஆலயம், காசிக்கும் கோட்டைக்கும் நெருங்கிய தொடர்பை வைத்துள்ளது. காசிக்கு இணையாகப் போற்றப்படும் இவ்வாலயத்தை அடியார்கள் தரிசித்துப் பயன் பெறலாம்.

– கட்டுரை – படங்கள்:
**பனையபுரம் அதியமான்.**

சிறப்பாசிரியர் மற்றும் வெளியிடுவோர் } ப.ரா. சம்பத் இ.ஆ.ப., ஆணையர்
தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத் துறை,
சென்னை – 600 034. தொலைபேசி எண்: 28334811/12/13
ஆசிரியர்(கூ.பொ) ம. தேவேந்திரன், பி.எஸ்ஸி., பி.எல்., துணை ஆணையர்
அச்சிடுவோர் சக்தி ஸ்கேனர்ஸ் பிரைவேட் லிட்., சென்னை–86
தொலைபேசி: 23450920/28117575

குறைந்த செலவில் நீண்ட ஆயுள் உத்திரவாதத்துடன்
கோயில் கலசங்கள், விமானம், கவசங்கள், கொடிமரம், பிரபை,
பத்தரை மாத்து தங்கத்தில் பளப்பளக்க செய்வோம்

Raja Annamalaipuram
Iyappan Temple
Golden chariot
Aug 2006



Thejus

24-Ct Gold Platings

94,g n chetty road,t.nagar, chennai 600 017. ph.2815 6370.
94440 00060, email: divyasid@gmail.com www.thejus.com

பதிவுஎண்: TN/CH(C)/305/09-11/WPP NO. 451/09-11



# அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழநி

# தைப்பூசத்திருவிழா அழைப்பிதழ்

பழநி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் 2010ஆம் ஆண்டு தைப்பூசத் திருவிழா வருகிற 24.01.2010 ஆம் நாள் தொடங்கி 02.02.2010 ஆம் நாள் முடிய நடைபெற உள்ளது. தைப்பூசத் திருவிழாவை முன்னிட்டு பழநி திருக்கோயில் நிர்வாகம் சார்பாக பக்தர்களுக்கு செய்துள்ள வசதிகள்

## பஞ்சாமிர்தம்

இத்திருக்கோயிலின் விசேஷ பிரசாதமான அபிஷேகப் பஞ்சாமிர்தம் சுகாதாரமான முறையில் தயாரிக்கப்பட்டு, டப்பாக்களில் அடைக்கப்பட்டு ரூ.25/ மற்றும் ரூ.30/வீதம் திருக்கோயில் பஞ்சாமிர்த விற்பனை நிலையங்களான 1.மலைக்கோயில் தெற்கு வெளிப்பிரகாரம், 2.மலைக்கோயில் வடக்கு வெளிப்பிரகாரம், 3.வின்ச் நிலையம், 4.ரோப்கார் நிலையம், 5.மங்கம்மாள் மண்டபம் அருகில், 6.பாதவிநாயகர் கோயில் மற்றும் 7.பேருந்து நிலையம் தகவல் நிலையம் ஆகிய இடங்களில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

## இதர ஏற்பாடுகள்

1. கிழக்கு கிரிவீதியில் திருக்கோயில் சார்பாக பேருந்து நிலையம் அமைக்கப் பட்டுள்ளது. சிறப்பு பேருந்து வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.
2. பாதயாத்திரை வழித்தடங்களில் நிழற்பந்தல், குடிநீர் வசதி, மின்வசதி, குளியல்அறை மற்றம்கழிப்பறை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
3. ரெட்டியார் சத்திரம், ஓட்டன்சத்திரம், சத்திரப்பட்டி, ஆயக்குடி ஆகிய இடங்களில் உள்ள காவடி மண்டபங்கள் புதுதாராபுரம்-தாசநாயக்கன்பட்டி தங்கும் மண்டபம் ஆகிய இடங்களில் குளியல், கழிப்பறை வசதிகளுடன் பாதயாத்திரை பக்தர்கள் தங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சாலை ஓரங்களில் நிழற்பந்தல் வசதிகள் செய்யப்பட்டுள்ளது.
4. பாதயாத்திரை வழித்தடங்களில் நடமாடும் மருத்துவ வசதிகள் முதலுதவி வசதியுடன் அனைத்து இடங்களில் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
5. மலைக்கோயில், படிப்பாதை, கிரிவீதி, பாதவிநாயகர் கோயில் ஆகிய இடங்களில் சிறப்பு மருத்துவ முகாம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் நடமாடும் மருத்துவ வாகனங்கள் பாதயாத்திரை வழிகளில் செயல்படுத்தப்படுகிறது.

## முக்கிய திருநாட்கள்

| | |
|---|---|
| 24.01.2010 | கொடியேற்றம் ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணிக்கு மேல் 11.30 மணிக்குள் |
| 29.01.2010 | திருக்கல்யாணம் வெள்ளிக்கிழமை இரவு 7.15 மணிக்கு மேல் 8.00 மணிக்கு வெள்ளிரதம் புறப்பாடு இரவு 8.30 மணிக்கு |
| 30.01.2010 | தைப்பூசம் திருத்தேர் சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு |
| 02.02.2010 | தெப்பத்திருவிழா செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்குமேல் 6.30 மணிக்குள் |

தரிசனவழிவிபரங்கள்1.பொதுதரிசனம்வழி-கட்டணம்இல்லை,2.சிறப்புஅனுமதிவழி-ரூ.20/-, 3.தனிவழி சிறப்புக்கட்டணம்-ரூ.200/-

**தி.இராசமாணிக்கம்**
இணை ஆணையர்/செயல் அலுவலர்

**கோ. செ.மங்கையர்க்கரசி**
துணை ஆணையர்

**நா.நடராஜன்**
உதவி ஆணையர்/நேர்முக உதவியாளர்

**டாக்டர் ச.வே.பாலசுப்பிரமணியம்**
அறங்காவலர் குழுத்தலைவர்

கார்த்தி ப.சிதம்பரம், அறங்காவலர்
ஆ.நாகராஜன், அறங்காவலர்
இந்திராரவிச்சந்திரன், அறங்காவலர்
தா. குண்டன், அறங்காவலர்